விலை: 50.00
பக்கங்கள் - 16
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a News Paper in Sri Lanka




# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 26
ஒலி 202 வள்ளுவர் ஆண்டு 2056 ஆனி 25 புதன்கிழமை (09.07.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

## நீதிமன்ற விசாரணைக்கு அரசாங்கம் பூரண ஆதரவு



### செம்மணி குறித்து அமைச்சர் நளிந்த

(கொழும்பு)
செம்மணி மனிதப் புதைகுழி விவகாரம் தொடர்பில் உள்ளக விசாரணைகளுக்கு அரசாங்கம் பூரணமான ஆதரவை வழங்கும் என அமைச்சரவைப் பேச்சாளர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

வாராந்த அமைச்சரவை முடிவை அறிவிக்கும் நேற்றைய ஊடக மாநாட்டி 15ஆம் பக்கம் பார்க்க

## செம்மணிப் புதைகுழி தொடர்பில் சர்வதேச விசாரணை அவசியம்

### ஐக்கிய மக்கள் சக்தி வலியுறுத்து



(யாழ்ப்பாணம்)
செம்மணி மனிதப் புதைகுழி தொடர்பில் சர்வதேச விசாரணைகள் அவசியம் என பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி வலியுறுத்தியுள்ளது.

இதுகுறித்து நேற்று யாழ்.ஊடக அமையத்தில் இடம்பெற்ற சந்திப்பில் அந்தக் கட்சியின் வட மாகாண அமைப்பாளர் உமாசந்திரபிரகாஸ் தெரிவித்ததாவது, 15ஆம் பக்கம் பார்க்க

### நீண்டு செல்லும் பயங்கரம்

## செம்மணியில் நேற்றும் 4 எலும்புக்கூடுகள்

(யாழ்ப்பாணம்)
செம்மணியில் நேற்று செவ்வாய்க்கிழமை 13ஆவது நாளாக மேற்கொள்ளப்பட்ட அகழ்வு நடவடிக்கையின்போது புதிதாக நான்கு மனித எலும்புக் கூட்டுத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

(03ஆம் பக்கம் பார்க்க)



## நயினை நாகபூசணித் தாயார் இன்று இரதமேறுகின்றார்

(நயினாதீவு)
வரலாற்றுச் சிறப்புமிக்க நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலய இரதோற்சவப் பெருவிழா இன்று புதன்கிழமை காலை 8.30 மணியளவில் பக்திபூர்வமாக இடம்பெறவுள்ளது.

அதிகாலை 4 மணிக்கு நாகபூசணித் தாயாருக்கு விசேட அபிஷேகங்கள் இடம்பெற்று காலை 7 மணியளவில் வசந்த மண்டபப்பூஜையைத்தொடர்ந்து விநாயகர், முருகப்பெருமான் சகிதம்நாகபூசணி அம்மன் தேரில் எழுந்தருளவுள்ளார். (ந-7)

## ஓமந்தையில் காணி அபகரிப்பு இடம்பெறாது

### அரசாங்கம் உறுதிபடத் தெரிவிப்பு

(கொழும்பு)
வவுனியா ஓமந்தையில் பொலிஸ் நிலையம் அருகில் உள்ள காணியை பொலிஸார் துப்புரவு செய்யவோ, புதிதாக கட்டுமானங்கள் அமைக்கவோ உடனடியாக தடை விதிப்பதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் எட்டப்பட்ட முடிவு, 15ஆம் பக்கம் பார்க்க

## மரத்திலிருந்து தவறி விழுந்தவர் உயிரிழப்பு

(கிளிநொச்சி)
கிளிநொச்சி குமாரசாமிபுரம் பகுதியில் மரத்திலிருந்து தவறிவிழுந்த குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நேற்று மாலை 5 மணியளவில் இடம்பெற்ற குறித்த பரிதாபகரச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது, 15ஆம் பக்கம் பார்க்க

## தையிட்டி விகாரைக்கு எதிராக இரு நாள் போராட்டம்

### அழைப்பு விடுத்தது முன்னணி

(யாழ்ப்பாணம்)
தையிட்டிப் பகுதியில் தனியார் காணிகளை ஆக்கிரமித்து இலங்கை இராணுவத்தால் அமைக்கப்பட்டுள்ள சட்டவிரோத விகாரைக் கட்டடத்துக்கு எதிராக இன்றும் நாளையும் முன்னெடுக்கப்படும் போராட்டத் 15ஆம் பக்கம் பார்க்க

## கிருபாகரனுக்கு அச்சுறுத்தல்

(யாழ்ப்பாணம்)
செம்மணி மனிதப் புதைகுழி தொடர்பில் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்த செம்மணி சித்துப்பாத்தி மயானத்தின் நிர்வாக சபை உறுப்பினர் கிருபாகரன் தனக்கு அச்சுறுத்தல் இருப்பதாகத் தெரிவித்துள்ளார். 15ஆம் பக்கம் பார்க்க

## ரிக்ரொக்கில் சர்ச்சைக்குரிய காணொளி இளைஞர் கைது

(மன்னார்)
பொலிஸ் சீருடை அணிந்து சமூக வலைத்தளமான ரிக்ரொக்கில் (Tiktok) காணொளி வெளியிட்டு சர்ச்சையை ஏற்படுத்திய இளைஞரை வரும் ஜூலை 22ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க மன்னார் நீதவான் நீதிமன்றம் கட்டளையிட்டது.

குறித்த நபர் மீது பல்வேறு குற்றவியல் வழக்குகள் நீதிமன்றங்களில் உள்ள நிலையில் அவற்றில் முன்னிலையாகத் தவறியதால் 25இற்கு 15ஆம் பக்கம் பார்க்க

### செம்மணி மனிதப் புதைகுழியில்

## 600 தமிழர்களுக்கு மேல் புதைக்கப்பட்டிருக்கலாம்



### சட்டத்தரணி சுகாஸ் பரபரப்புத் தகவல்

(யாழ்ப்பாணம்)
செம்மணி மனிதப் புதைகுழியில் 600க்கும் மேற்பட்ட தமிழர்கள் கொலை செய்யப்பட்டு புதைக்கப்பட்டிருக்கலாம் என சட்டத்தரணி 15ஆம் பக்கம் பார்க்க

நடுவுநிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனக்குமுறலுடன்
# 3 ஆம் ஆண்டு நினைவலைகள்



## அமரர் டானியல் நற்குணராணி

அன்னை மடியில் 1955.01.19 | ஆண்டவன் அடியில் 2022.06.13

திதி :- சதுர்த்தசி வளர்பிறை

கண்முன்னே வாழ்ந்த காலம்
கனவாகிப் போனாலும் அம்மா!
எம் முன்னே உங்கள் முகம்
எந்நாளும் உயிர்வாழும்
மண் விட்டு மறைந்த நாட்கள்
விண்ணோக்கிச் சென்றாலும் அம்மா!
கண்விட்டு மறையாமல் கனகாலம்
இருப்பீங்கள் எங்களுடன்!

எம் உயிரே உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

நீங்கா நினைவுகளுடன் என்றும் உங்கள்
மகள் (நிறஞ்சா), பேரன் (துஷாந்)
மாசியப்பிட்டி, சண்டிலிப்பாய்.

(4744)

---

சைவப்புலவர் சு.செல்லத்துரை
அறக்கட்டளை நிதியம்

## பொதுக்கூட்ட அறிவித்தல்

காலம் :- 13.07.2025 ஞாயிற்றுக்கிழமை
இடம் :- ஏழூர் மண்டபம்
யா/இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலயம்
நேரம் : காலை 10.00 மணி

மேற்படி பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும் இடம்பெற உள்ளதால் ஆர்வம் உள்ள அனைவரையும் அன்புடன் அழைத்து நிற்கின்றோம்.

தலைவர் 09.07.2025 செயலாளர்

(C-3372)

---

# கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையின் ஆய்வுகூட
உதவியாளர் திரு. **த.வசந்தகுமார்**
அவர்களின் அன்பு மாமியார்

**திருமதி கமலாலக்சுமி அருளானந்தம்**

அவர்கள் காலமான செய்தியறிந்து துயரடைகின்றோம். அன்னாரின் இழப்பினால் துயருறும் அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி சாந்தி சாந்தி


ஆசிரியர் நலன்புரிக் கழகம்,
யா/பெரியபுலம் மகா வித்தியாலயம்.

(C-3369)

---

# மரண அறிவித்தல்

பிறப்பு 12 - 08 - 1941



இறப்பு 07 - 07 - 2025

## நல்லதம்பி சிவலிங்கம் (GM)

(முன்னாள் பொதுமுகாமையாளர் சுன்னாகம் ப.நோ.கூ. சங்கம்)

வீரபத்திரர் கோவிலடி குப்பிழான் வடக்கினைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நல்லதம்பி சிவலிங்கம் அவர்கள் 07.07.2025 திங்கட்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நல்லதம்பி - ஆச்சிமுத்து தம்பதிகளின் இளைய மகனும் காலஞ்சென்றவர்களான சின்னையா - ஆச்சிமுத்து தம்பதிகளின் மருமகனும் கணேசம்மா அவர்களின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம், நல்லமுத்து, தையல்முத்து, இரத்தினசிங்கம், பவளம்மா ஆகியோரின் சகோதரனும் சிவலோகநாதன், சிவகரன், சிவயோகன் ஆகியோரின் அன்புத் தந்தையும் பிறேமாஜினி, அனுஷா, நிலோஜினி ஆகியோரின் மாமனாரும் அருஞ்சிகா, அருணிகா, சிந்து, சயன், சயூரி, சிவன்ஜா, சிவன்ஜன் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை 10.07.2025 வியாழக்கிழமை 9.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் குப்பிழான் காடாக்கடம்பை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

வீரபத்திரர் கோவிலடி,
குப்பிழான் வடக்கு,
குப்பிழான்.

தகவல்:
குடும்பத்தினர்
T.P : 074 313 7323

(4749)

---

# விண்ணக வாழ்வில் 31 ம் நாள் நினைவுத் திருப்பலி

"ஆண்டவரே உம்மை காக்கின்றார் : அவர் உமக்கு வலப்பக்கத்தில் உள்ளார் : அவரே உமக்கு நிழல் ஆவர்" (திருப்பாடல் 121 : 5)

மண்ணில் 15 . 10 . 1939



விண்ணில் 09 . 06 . 2025

## அமரர் அந்தோனிப்பெர்ணாந்து இமல்டாறோஸ் (திலகம்)

கடந்த 09.06.2025 அன்று இறைபதமடைந்த அ. இமல்டாறோஸின் ஆத்ம இளைப்பாற்றிக்காக யாழ்ப்பாணம் புனித மரியன்னை பேராலயத்தில் இன்று ஆடி மாதம் 9ம் திகதி புதன்கிழமை மு.ப 11.00 மணிக்கு ஒப்புக் கொடுக்கப்படும் இரங்கல் திருப்பலியில் பங்கு பற்றி அன்னாரின் ஆத்ம இளைப்பாற்றிக்காக செபிப்பதுடன் அதனைத் தொடர்ந்து இல. 11, அச்சுக்கூட வீதி, யாழ்ப்பாணத்திலுள்ள எமது இல்லத்தில் நடைபெறும் மதிய போசனவிருந்திலும் கலந்து கொள்ளுமாறு பணிவன்புடன் அழைக்கின்றோம்.

இவரின் இழப்பினால் தவித்திருந்த வேளையில் நேரடியாக வந்தும் இறுதிச் சடங்கில் கலந்து கொண்டும் எம் துயரில் பங்கெடுத்த அருட்பணியாளர்கள், துறவிகள், அருட்சகோதரிகள் மற்றும் மருத்துவ நலன்களை கவனித்த வைத்தியர்கள், தாதிகள் ஏனைய ஊழியர்களிற்கும் தொலைபேசியினுடாகவும் சமூக வலைத்தளங்கள் மற்றும் மலர் வளையங்கள் ஊடாகவும் வெளிநாடுகளிலிருந்தும் எம் துயரைப் பகிர்ந்து கொண்ட அனைத்து உறவுகள், நண்பர்கள் அத்துடன் ஏனைய வழிகளில் உதவிகளைப் புரிந்த அனைவரிற்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிக்கின்றோம்.

குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செம்மணியில்...

யாழ்ப்பாண நீதவான் நீதிமன்ற நீதிபதி ஏ.ஏ.ஆனந்தராசா முன்னிலையில் இவ் வழக்கு இடம் பெற்றது.

செம்மணி மனிதப் புதை குழி அகழ்வின் இரண்டாவது கட்டத்தின் 13வது நாள் அகழ்வுப் பணிகள் நேற்றையதினம் முன்னெடுக்கப்பட்ட நிலையில் இதுவரை 56 மனித எலும் புக்கூடுகள் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன் அவற்றில் 50 எலும்புக்கூடுகள் முழுமையாக அகழ்ந்து எடுக்கப்பட்டு நீதிமன்றக் காவலுக்கு கையளிக்கப் பட்டுள்ளதாகச் சட்டத்தரணி ரணித்தா ஞானராஜா தெரிவித்துள்ளார்.

நேற்றையதினம் செம்மணிப் பகுதியில் வைத்து ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஏற்கனவே சந்தேகத்திற்கிடமான பகுதி என தொல்லியல் பேராசிரியர் ராஜ்சோமதேவாவினால் அடையாளமிடப்பட்ட பகுதி அகழ்வு ஆராய்ச்சி பணிகளுக்கான இரண்டாவது பிரதேசமாக நீதிமன்றத்தால் நேற்று பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

அத்துடன் ஏற்கனவே முதலில் ஆரம்பிக்கப்பட்ட முதலாவது அகழ்வாராய்ச்சி பகுதியானது அகழ்வு ஆராய்ச்சிப் பணிகளுக்கான முதலாவது பகுதியாகவும் அடையாளப்படுத்தப்பட்டுள்ளது.

அடையாளப்படுத்தப்பட்ட இரண்டாவது பகுதியில் 3 மனித என்பு எச்சங்கள் துப்புரவாக்கப்பட்டுள்ளது. இன்றைய தினத்திலிருந்து இவற்றுக்கு இலக்கமிடல் பணிகள் ஆரம்பமாகும்.

மனித எலும்புகளுடன் சேர்ந்த துணிகள் மற்றும் சப்பாத்து போன்ற பொருட்கள் அடையாளப்படுத்தப்பட்டுள்ளன. அவை இன்னமும் நிலத்திலிருந்து பிரித்தெடுக்கப் படவில்லை. அது பிரித்தெடுக்கப்பட்ட பின்னர் மேலதிக தகவல்கள் கிடைக்கும் என்றார். (ந-7,33,104)

## இளம் குடும்பஸ்தர் சடலமாக மீட்பு

யாழ்ப்பாணம் - நீர்வேலிப்பகுதியில் உள்ள வீடொன்றிலிருந்து நேற்று இளம் குடும்பஸ்தர் ஒருவர் சுருக்கிட்ட நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

நீர்வேலி அச்செழு சூரசிட்டிப் பகுதியைச் சேர்ந்த அன்ரன் சுதாகரன் (வயது 28) என்ற இரு பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவராவார்.

சம்பவ இடத்துக்குச் சென்ற யாழ். மாவட்ட திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மரண விசாரணைகளை மேற்கொண்டதோடு உடற்கூற்றுப்பரிசோதனையை மேற்கொண்டு அறிக்கையிடுமாறு பணிப்புரை விடுத்தார். சடலம் உடற்கூற்றுப் பரிசோதனையின் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (ந-7)

## கண்ணீர் அஞ்சலி

எமது 95 A/L வர்த்தகப்பிரிவு நண்பியான **திருமதி சந்திரசேகரம் வதனா** அவர்களின் தாயார்

**அமரர் சதாசிவம் தவமணிதேவி**



கனடாவில் 04.07.2025 அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினரின் துயரில் பங்குகொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரிவுத்துயரில் பங்கு கொள்ளும்
**95 A/L வர்த்தகப் பிரிவு நண்பர்கள்**
**95 பட்டாம் பூச்சி நண்பர்கள்**

(C-3373)

## மரண அறிவித்தல்



பிறப்பு 23.03.1946 இறப்பு 08.07.2025

## திரு.சண்முகம் நல்லதம்பி

புலவராவோடையைப் பிறப்பிடமாகவும் கரணவாய் வடக்கு கரவெட்டியை வசிப் பிடமாகவும் கொண்ட திரு. சண்முகம் நல்லதம்பி அவர்கள் நேற்று (08.07.2025) செவ்வாய்க் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அம்பலவாணர் சண்முகம் - தங்கம்மா தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற தர்மலிங்கம்- பொன்னம்மா தம்பதிகளின் மருமகனும் விஜயலட்சுமியின் அன்பு கணவரும் மணிமாறன், திருமாறன், ரகுமாறன், ரவிமாறன் ஆகியோரின் தந்தையும் ரேகா, நிஷாந்தி, ராதிகா, நிஷாந்தி ஆகியோரின் மாமனாரும் ஆரணி, துஷாந்த், ஆர்த்தி, கிரிஷ்மிகா, தனுஷன், இனியாள் ஆகியோரின் அன்பு பேரனும் பறுபதம், தஞ்சம்மா, கனகம்மா, கந்தசாமி, கிருஷ்ணபிள்ளை, பரமானந்தம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் சரோஜினிதேவி, விஜயரத்தினம், தருமரத்தினம், குலரத்தினம், ஜெயலட்சுமி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 09.07.2025 புதன்கிழமை காலை 9 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரிகைகளுக்காக ஆலங்கட்டை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

ரகுமாறன் : 077 571 5222
திருமாறன் : 077 394 6330 (C-3374)

தகவல்: குடும்பத்தினர்

# MUNICIPAL COUNCIL, JAFFNA
# INVITATION FOR BIDS
## Procurement of Electronic Goods @ Computer items

1. The Chairman Regional Procurement Committee (RPC) on behalf of Municipal Council, Jaffna now invites sealed bids from eligible and qualified bidders as in the table below:
2. Bidding will be conducted through National Competitive Bidding.
3. Interested eligible bidders may obtain further information from Mayor/ Commissioner, Jaffna Municipal Council. TP: 021 222 8874, Fax: 021 222 2334 E-Mail: mcjaffnamailc@yahoo.com office hours from 09:00 hrs. to 15:00 hrs.
4. In these quotations are limited suitable business or company registrations and shall not include black list tenders. Additional details are provided in the bidding document.
5. A complete set of Bidding Documents in English language could be purchased by interested bidders from the address given below from **9th July 2025 until 22nd July 2025 from 09:00 hrs. to 14:00 hrs.** on the submission of a written application and upon a payment of non-refundable fee of Rs.2000.00. The payment method will be paid by cash or bank draft drawn in favor of **Commissioner, Jaffna Municipal Council.**
6. Bids must be delivered to the address given below on or before **23rd July 2025 at 11.00 hrs**. Bid number must be written on the top of envelop. Late bids will be rejected. Immediately after closing of bids will be opened in the presence of the bidders' representatives' who choose to attend at the address given below. **All bids must be accompanied by a bid security and the validity periods of bid security are given in table below.**
7. A pre bid meeting will be held at Jaffna Municipal Council, Point Pedro Road, Jaffna on **15th July 2025** at 10:00 hrs, interested bidders may participate in this meeting their own expenses.
8. The address referred to above is **Chairman, Procurement Committee, Jaffna Municipal Council, Point Pedro Road, Nallur, Jaffna.** The Bid Name & No must be mentioned on the top of the envelop. The bid will be sent in post/ in courier service or shall be deposited in the bid box in the above address.

| No | Bid Name & No. | Name of the Item | Estimated Amount (Without VAT) Rs. million | Period of Contract | Bid Validity Period | Bid Security | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | Amount | Required Period |
| 01 | JMC/PMD/02/ Desktop Computers with UPS & Laptops - 2025 | Procurement for Supplying of 10 Nos of Desktop Computers with UPS & 03 Nos of Laptops – 2025 | 3.6 | 30 days | 49 days | 50,000.00 | 07.10.2025 |
| 02 | JMC/PMD/02/ Smart Panel | Procurement for Supplying of 02 Nos. of Smart Panel with all accessories -2025 | 2.0 | 30 days | 49 days | 25,000.00 | 07.10.2025 |
| 03 | JMC/PMD/02/ Photocopier & 65`` Smart TV - 2025 | Procurement for Supplying of 01 No of Photocopier & 02 No of 65`` Smart TV – 2025 | 1.4 | 30 days | 49 days | 20,000.00 | 07.10.2025 |

**Chairman,**
**Regional Procurement Committee,**
**Municipal Council, Point Pedro Road,**
**Nallur, Jaffna.**

(C-3361) **09.07.2025**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தமிழ்நாடு தூத்துக்குடி மாவட்டம் திருச்செந்தூர் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி ஆலய மகாகும்பாபிஷேகம் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இலட்சக்கணக்கான பக்தர்கள் மத்தியில் பக்திபூர்வமாக இடம்பெற்றது.

# கிரிக்கெட் உலகையே தன்பால் ஈர்த்த வியான் முல்டரின் நெகிழ்ச்சி சம்பவம்



தென் ஆபிரிக்க அணியின் துடுப்பாட்டவீரர் வியான் முல்டர் கிரிக்கெட் உலகின் கவனத்தைத் தன்பால் ஈர்த்துள்ளார்.

மிகவும் அரிய உலக சாதனையொன்றை நிலைநாட்டக்கூடிய வாய்ப்பு கிடைத்தும் அந்த வாய்ப்பினை முல்டர் நிராகரித்துள்ளார்.

கிரிக்கெட் உலகம் போற்றும் ஜாம்பவான்களில் ஒருவரான மேற்கிந்தியத் தீவுகள் அணியின் முன்னாள் தலைவர் பிரயன் லாராவின் சாதனையை முறியடிக்க முல்டருக்கு வாய்ப்புக் கிடைக்கப் பெற்றது.

டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் வீரர் ஒருவர் பெற்றுக் கொண்ட அதிகூடிய ஓட்டங்கள் என்ற சாதனையை பிரயன் லாரா நிலைநாட்டியுள்ளார். கடந்த 2004ஆம் ஆண்டு இங்கிலாந்து அணிக்கு எதிராக பிரயன் லாரா ஆட்டமிழக்காது 400 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டுள்ளார்.

சிம்பாப்வே அணிக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் முல்டர் ஆட்டமிழக்காது 367 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்ட போது ஆட்டத்தை நிறுத்திக் கொண்டார். இது குறித்து அவர் தெரிவித்துள்ளதாவது,

பிரயன் லாரா ஓர் ஜாம்பவான் எனவும் அவரது சாதனையைத் தாம் முறியடிப்பது பொருத்தமற்றது எனவும் லாராவின் சாதனை அப்படியே நீடிக்க வேண்டும் அதுவே முறை எனவும் முல்டர் தெரிவித்துள்ளார்.

அணியின் வெற்றியை உறுதி செய்யும் நோக்கில் தாம் ஆட்டத்தை இடைநிறுத்திக் கொண்டதாகவும் குறிப்பிட்டுள்ளார். எவ்வாறெனினும் இந்தப் போட்டியில் முல்டர் பல்வேறு சாதனைகளை நிலைநாட்டியுள்ளார். தென் ஆபிரிக்க அணியின் சார்பில் வீரர் ஒருவர் பெற்றுக் கொண்ட அதிகூடிய ஓட்டங்களை முல்டர் பெற்றுக் கொண்டுள்ளார்.

தனது நாட்டு வீரர் அல்லாத ஓர் கிரிக்கெட் ஜாம்பவானின் சாதனையை முறியடிக்கக் கூடாது அவரது பெயர் வரலாற்றில் நிலைத்திருக்க வேண்டுமென முல்டர் சாதனை முயற்சியை கைவிட்டமை அனைவரையும் நெகிழ்ச்சியில் ஆழ்த்தியுள்ளது. (3)

# விம்பிள்டன் டென்னிஸ் போட்டியை நேரில் கண்டு இரசித்த கோலி



“கிராண்ட்ஸ்லாம்” போட்டிகளில் ஒன்றான விம்பிள்டன் டெனிஸ் தொடர் லண்டனில் நடந்து வருகிறது. இதில் ஆண்கள் ஒற்றையர் பிரிவில் நேற்று முன்தினம் நடைபெற்ற ரவுண்ட் ஆப் 16 சுற்று ஆட்டம் ஒன்றில் முன்னணி வீரரான நோவக் ஜோகோவிச் (செர்பியா). அவுஸ்திரேலியாவின் அலெக்ஸ் டிமினார் உடன் மோதினார். இந்த போட்டியில் தொடக்கம் முதலே அபாரமாக செயற்பட்ட ஜோகோவிச் 1-6, 6-4, 6-4, 6-4 என்ற செட் கணக்கில் அலெக்ஸ் டிமினாரை வீழ்த்தி காலிறுதிக்கு முன்னேறினார்.

இந்த நிலையில், இந்த போட்டியை இந்திய கிரிக்கெட் வீரர் விராட் கோலி நேரில் கண்டு இரசித் தார். தனது மனைவி அனுஷ்கா சர்மாவுடன் அவர் போட்டியை கண்டு இரசித்தார். (3)



2025 ஆம் ஆண்டுக்கான உலகக்கிண்ண இளையவர் போட்டி மற்றும் பெரியோருக்கான ஆசியன் ரோல் போல் அணியில் மன்னார் மாவட்டம் சார்பாக இலங்கை அணிக்கு தெரிவாகி சர்வதேச ரீதியில் மூன்றாம் இடம் பெற்றுக் கொண்ட வீர வீராங்கனைகளை கௌரவிக்கும் நிகழ்வு ரோல் போல் சங்க மன்னார் கிளைத் தலைவர் விமலேஸ்வரன் தலைமையில் கடந்த வியாழக்கிழமை மன்னார் நகரசபை மண்டபத்தில் இடம்பெற்றது.

# புற்றுநோயால் பாதிக்கப்பட்ட சகோதரிக்கு வெற்றியை அர்ப்பணிக்கிறேன் - ஆகாஷ் தீப்



இந்திய மற்றும் இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான இரண்டாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் இந்திய அணி 336 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது.


குறித்த வெற்றிக்கு இந்திய அணியின் ஆகாஷ் தீப்பின் பந்துவீச்சும் முக்கிய காரணமாக அமைந்தது. இவர் முதல் இன்னிங்ஸில் 4 விக்கெட்டுகளையும், 2ஆவது இன்னிங்ஸில் 6 விக்கெட்டுகளையும் கைப்பற்றி போட்டியின் போக்கை மாற்றியிருந்தார்.

இந்தநிலையில் குறித்த போட்டி நிறைவடைந்த பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவித்த ஆகாஷ் தீப் பின்வருமாறு குறிப்பிட்டார்.

“எனது சகோதரி புற்றுநோயால் பாதிக்கப்பட்டுள்ளார். அவருக்கு இந்த வெற்றியை அர்ப்பணிக்கிறேன்.” என ஆகாஷ் தீப் கூறியுள்ளார். (3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதுக்குடியிருப்பில் வீதி நடைமுறை விழிப்புணர்வு செயற்பாடு



(நெளுக்குளம்)

வீதி நடைமுறை தொடர்பான விழிப்புணர்வு நேற்று முன்தினம் முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பகுதியில் முன்னெடுக்கப்பட்டது.

புதுக்குடியிருப்பு பிராந்திய சுகாதார வைத்திய அதிகாரி சத்திய ரூபன், புதுக்குடியிருப்பு பொலிஸார், சுகாதார பரிசோதகர்கள் இணைந்து வீதி நடைமுறைகள் தொடர்பில் விளக்கம் அளித்தனர்.

வீதியில் பயணித்தமோட்டார் சைக்கிள், கார்கள் மற்றும் ஏனைய வாகனங்களை நிறுத்தி வாகனப் பட்டி அணிந்திருக்க வேண்டும். தலைக்கவசம் அணிவது எவ்வாறு, சிறு பிள்ளைகளை மோட்டார் சைக்கிள் ராங்கில் இருத்த கூடாது போன்ற பல வீதி நடைமுறைகள் தொடர்பில் விளக்கமளித்தனர். அத்துடன் வீதி விபத்துக்களால் ஏற்படும் பாதிப்புக்கள் குறித்தும் விளக்கமளிக்கப் பட்டது. (8-299)


**இந்திய சாஸ்திரியார் வருகை**

சிங்கப்பூர், மலேசியா மற்றும் பல நாடுகளில் புகழ் பெற்ற **இரத்தினசாமி** சாஸ்திரியார் அவர்கள் யாழ் வருகை. ஜாதகம், கைரேகை, எண் கணிதம் மற்றும் தொழில் முன்னேற்றம் இன்மை, புதிய தொழில் தொடங்க, திரு மணத்தடை, வாழ்வில் தோல்வி, குடும்பத்தில் பிரச்சினை வெளிநாடு செல்ல தடை, கல்வியில் தடை, குழந்தை பாக்கியம் மற்றும் எந்த பிரச்சினைக்கும் நேரில்.

தொடர்புகளுக்கு-076 682 7368
No.139, Main Street Jaffna.
யாழ்.நீதிமன்றத்துக்கு அருகாமையில்
(முன்பதிவு செய்து வரவும்)
(4678)

**லங்கா மஹால் (PVT) LTD**

DHL உள்நாட்டு, வெளிநாட்டு விரைவுப் பொதிகள் சேவை

அதிவிரைவாக குறைவான விலையில் இலவசமாக உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் சேகரிக்கப்படும். நம்பகமான சேவை.
(1309)

UK-1350, Australia-1950, Canada-2550, India-1490, Germany-1990, Italy-2250, Swiss-2490, France-2180

Western Union WU MoneyGram Ria Money Transfer

ஊடாக வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்படும் பணத்தினை எம்மிடம் இருந்து விரைவாக பெற்றுக்கொள்ளலாம்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை, கொழும்பு,
தொடர்புகளுக்கு
077 839 3974, 076 889 1308

# பாராட்டி வாழ்த்துகின்றோம்




திருமதி. சிவசுபைதா ஸ்ரீகணேஷன்

( sp.Tr.Maths, Dip.in counsiling, B.A, PGDE, MEd, SLTES - III )

எமது பாடசாலையில் 07.09.2022 தொடக்கம் 30.05.2025 வரை ஆசிரியராகக் கடமையாற்றி 07.07.2025 இல் இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவை தரம் III இற்கு (ஆசிரியர் வாண்மை விருத்தி நிலையம்,நெல்லியடி) கடமையேற்கும் திருமதி.சிவசுபைதா ஸ்ரீகணேஷன் அவர்களை பாராட்டி வாழ்த்துவதோடு, எமது பாடசாலையில் அவர் ஆற்றிய பணிகளைப் பாராட்டி நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.
(1308)

வாழ்த்துவோர்-
சேவையாளர் சங்கம்,
யா/சாவகச்சேரி மகளிர் கல்லூரி.

# ராஜ் ஜுவல்லர்ஸ்

நகை அடகுபிடிக்கும் சேவை

வட்டி வீதம் குறைக்கப்பட்டுள்ளது

1 பவுண் 22 கரட்டிற்கு



2,20,000/=

அடகுக்காலம் ஒருவருடம்

இல.59, ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி சந்தைக்கு அருகில்
021 221 7287 / 076636 1238
(4634)


# இராசிபலன்

09.07.2025
ஆனி 25, புதன்கிழமை
சதுர்த்தி பின்னிரவு 2.18 மணிவரை
மூலம் முழுவதும்

சுபநேரம் 4.28-5.58 மணிவரை
இராகுகாலம் 11.58-1.28 மணிவரை
நயினை நாகபூசணியம்மன் தேர்

சந்திராஷ்டமம்-
ரோகினி

வளவன்

**மேஷம்**
தடைகள் அகன்று தன வரவு கிடைக்கும் நாள், பூர்வீகச் சொத்து சம் பந்தப்பட் வகையில் நன்மையுண்டு, மறைமுகப் போட்டிகளையும் சமாளிப்பீர்கள்.

**கடகம்**
உற்சாகத்தோடு பணி புரிவீர்கள், வழிபாடு திருப்தி தரும், தொலை பேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், கௌரவமான நாள்.

**துலாம்**
உறவினர் வழியில் எதிர் பார்த்த உதவிகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, செய் தொழில் மேன்மையுண்டு, போசன சுகமுண்டு.

**மகரம்**
வீட்டை அழகுபடுத்து வதில் ஆர்வம் கூடும், உடல் நலனில் அக்கறை தேவை, இடமாற்றத்தில் இனிய மாற்றம் காண வேண்டிய நாள், வழிபாட்டில் ஆர்வம் கூடும்.

**ரிஷபம்**
மனதில் இனம் புரியாத குழப்பங்கள் தோன்றி மறையும், கேட்ட இடத்தில் உதவிகள் கிடைப்பது அரிது, வழிபாட்டால் சுகம் காண வேண்டிய நாள்.

**சிம்மம்**
சுபகாரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் காணும் நாள், சிந்தனை ஆற்றலினால் சிறப்படைவீர்கள், பணத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், தாழ்ந்த சுபாவமுண்டு.

**விருச்சிகம்**
குடும்ப மகிழ்ச்சி கூடும், நண்பர்கள் வழியில் சுப செய்திகள் வந்து சேரலாம், வாக்கு மேன்மையுண்டு, எடுத்த காரியங்களில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள்.

**கும்பம்**
இயல்பான வழிகளில் இன்பங்கள் கூடும், திடீர் பணவரவால் சந்தோச மடைவீர்கள், தித்திக்கும் செய்திகள் வந்து சேரலாம், ஆன்மிக சிந்தனை மேலோங்கும் நாள்

**மிதுனம்**
சென்ற இடங்களில் செல்வாக்கு மேலோங்கும் நாள், பணத் தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும், வெளிநாட்டு தொடர்புகள் அனுகூலம் தரும்.

**கன்னி**
பொருளாதார நிலை உயர வழிகள் செய்வீர்கள், பொழுது போக்கு விடயங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், தொலைபேசி வழியில் சுப செய்திகள் வந்து சேரலாம்.

**தனுசு**
வழிபாட்டில் ஆர்வம் கூடும், மற்றவர்களின் விமர்சனங்களை மறந்து செயற்படுவது நல்லது, வீட்டு உபயோகப் பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு.

**மீனம்**
பெரிய மனிதர்களின் தொடர்புகள் உங்களின் தகுதியை உயர்த்தும்; குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், உற்சாகமான நாள்.

உன் மீது நம்பிக்கை வைப்பவர் மீது அதிக நேரத்தைச் செலவிடு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ லங்கா இன்ஷூரன்ஸ் லைஃப் தனது ஆயுள் காப்புறுதி ஒப்பந்ததாரர்களுக்கு ரூ.12.5 பில்லியன் போனஸ் கொடுப்பனவு அறிவிப்பை வெளியிட்டுள்ளது

02 ஜுலை 2025, **கொழும்பு** – தேசத்தின் உறுதியான மற்றும் நம்பிக்கையை வென்ற ஆயுள் காப்புறுதி சேவை வழங்குனர் எனும் வகையில் ஸ்ரீலங்கா இன்ஷூரன்ஸ் லைஃப் (SLICLL), 2024 ஆம் ஆண்டுக்காக தனது ஆயுள் காப்புறுதி ஒப்பந்ததாரர்களுக்கு மாபெரும் ரூ. 12.5 பில்லியன் போனஸ் கொடுப்பனவை வழங்கவுள்ளதாக அறிவித்துள்ளது. இலங்கையின் ஆயுள் காப்புறுதித் துறையில் அதியுயர் வருடாந்த ஆயுள் காப்புறுதி போனஸ் கொடுப்பனவாக இது அமைந்துள்ளது. இந்த பிரகடனத்தினூடாக, 2006 ஆம் ஆண்டு முதல் காப்புறுதி ஒப்பந்ததாரர்களுக்கு செலுத்தப்பட்டுள்ள மொத்த போனஸ் கொடுப்பனவுத் தொகை ரூ. 116.6 பில்லியனாக உயர்வடையும். அதனூடாக வருடாந்தம் தொடர்ச்சியாக அதியுயர் போனஸ் கொடுப்பனவை வழங்கும் ஸ்ரீலங்கா இன்ஸூரன்ஸ் லைஃப் நிறுவனத்தின் அசைக்க முடியாத சாதனை மேலும் உறுதி செய்யப்பட்டுள்ளது.

பொருளாதார செயற்பாடுகள் மீட்சியை பதிவு செய்திருந்த ஆண்டில், ஒப்பற்ற மீட்சி மற்றும் நிதிசார் முன்னேற்றத்தை ஸ்ரீலங்கா இன்ஷூரன்ஸ் லைஃப் வெளிப்படுத்தியிருந்தது. நிறுவனத்தின் சொத்துகள் இருப்பு ரூ. 238.6 பில்லியனாக உயர்வடைந்திருந்ததுடன், தொழிற்துறையின் மாபெரும் ஆயுள் காப்புறுதி நிதியமான ரூ. 213.2 பில்லியனை தொடர்ந்தும் பேணியிருந்தது.

சராசரியாக, மாதமொன்றில் ரூ. 1 பில்லியனுக்கு அதிகமான தொகை முதிர்வு மற்றும் உரிமை வழங்கல்களாக செலுத்தப்பட்டிருந்ததுடன், வருடாந்த போனஸ் தொகைக்கு மேலதிகமாக மொத்தமாக சுமார் ரூ. 12.9 பில்லியன் தொகை செலுத்தப்பட்டது. அதனூடாக, நிறுவனத்தின் உறுதியான முதலீட்டு நிர்வாக மூலோபாயங்கள் மற்றும் காப்புறுதிதாரர் பாதுகாப்பில் ஒப்பற்ற அர்ப்பணிப்பு ஆகியனவும் வெளிப்படுத்தப்பட்டிருந்தன.

2024 ஆம் ஆண்டில் நிறுவனம் அதிசிறந்த நிதிப் பெறுபேறுகளைப் பதிவு செய்திருந்தது. வரிக்கு முந்திய ,லாபம் ரூ. 30.7 பில்லியனாக பதிவாகியிருந்தது. தேறிய கட்டுப்பண செலுத்தல்கள் (GWP) ரூ. 26.3 பில்லியனாக பதிவாகி, 25% வருடாந்த வளர்ச்சியை எய்தியிருந்தது. புதிய வியாபார கட்டுப்பணங்கள் 48% இனால் அதிகரித்து ரூ. 5.3 பில்லி யனாக பதிவாகியிருந்தது. நிறுவனத்தின் வரலாற்றில் பதிவாகியிருந்த அதியுயர் பெறு மதியாகும்.

“தந்தையும் தாயும் போன்று” எனும் ஸ்ரீலங்கா இன்ஷூரன்ஸ் லைஃப் தனது வாக்குறுதிக்கமைய, அரவணைப்பு மற்றும் பராமரிப்பில் தன்னை அர்ப்பணித்துச் செயலாற்றுவதுடன், வியாபார செயற்பாடுகளுக்கு அப்பால் சென்று பரந்த சமூகங்களுக்கு பெறுமதி சேர்க்கும் செயற்பாடுகளிலும் ஈடுபட்டுள்ளது.

நிறுவனத்தின் செல்வாக்குச் செலுத்தும் கூட்டாண்மை சமூக பொறுப்பு ணர்வு (CSR) செயற்பாடுகள், நாட்டின் பல பகுதிகளைச் சென்றடைந்துள்ளன. “சுப பெத்தும் புலமைப்பரிசில்” திட்டத்தினூடாக 1800 ற்க்கும் அதிகமான மாணவர்களுக்கு வலுவூட்டப்பட்டுள்ளதுடன், ரூ. 200 மில்லியனுக்கு அதிகமான புலமைப் பரிசில்கள் வழங்கப்பட்டுள்ளன. “பாசல் பிரியத்த” திட்டத்தினூடாக, பின்தங்கிய 3300 பாடசாலைகளின் வசதிகள் மேம்படுத்தப்பட்டுள்ளன. தேசிய கலாசார நிகழ்வுகளான பெரஹெராக்கள் மற்றும் பொசொன் பௌர்ணமி யாத்திரிகர் உதவிச் செயற்பாடுகளுக்கும் ஆதரவுகள் வழங்கப்படுகின்றன.

2024 ஆம் ஆண்டில் ஏற்பட்ட வெள்ள அனர்த்தத் தின் போது, இடர் முகாமைத்துவ நிலையத்துடன் ஸ்ரீ லங்கா இன்ஷூரன்ஸ் லைஃப் கைகோர்த்து, பாதிக்கப்பட்ட பகுதிகளைச் சேர்ந்த 1100 ற்க்கும் அதிகமான குடும்பங்களுக்கு அத்தியாவசிய நுகர்வுப் பொருட்களை வழங்கியிருந்தது.

கரிசனை, பாதுகாப்பு மற்றும் சமூக சேவை போன்ற செயற்பாடுகளினூடாக மக்களுடன் தொடர்பை ஏற்படுத்தும் போன்ற நிலைபேறான முயற்சிகளுக்காக, தொடர்ச்சியாக 8 ஆவது வருடமாகவும் LMD ,இனால் “அதிகம் விரும்பப்படும் ஆயுள் காப்புறுதி வர்த்தக நாமம்” எனும் கௌர விப்பை ஸ்ரீலங்கா ,இன்ஷூரன்ஸ் லைஃப் பெற்றுக் கொண்டது. வர்த்தக நாமத்தின் வலிமையை மாத்திரம் இந்த கௌரவிப்பு பிரதிபலிக்காமல், மில்லியன் கணக்கான இலங்கையர்களின் வாழ்வுடன் ஆழமாக பொருத்தப்பாட்டை பேணுவதற்கும், பின்பற்றல் மற்றும் அரவணைப்பை பெற்றுக் கொடுப்பதற்கான அதன் ஆற்றலையும் வெளிப்படுத்துவதாகவும் அமைந்துள்ளது.

## வர்த்தக உலகம்

# டோக்கியோ சீமெந்து திருகோணமலையில் 1 மில்லியன் டொன் ஆலையை நிறுவி தனது கொள்ளளவை மேம்படுத்தியுள்ளது

டோக்கியோ சீமெந்து குழுமத்தின் நவீன வசதிகள் படைத்த சீமெந்து உற்பத்தி ஆலையை திருகோணமலையில் தொழிற்துறை மற்றும் தொழில் முயற்சியாண்மை விருத்தி அமைச்சர் சுனில் ஹந்துன்னெத்தி அண்மையில் திறந்து வைத்தார். முழுமையாக தன்னியக்கமயப் படுத்தப்பட்ட உயர் தொழில்நுட்பத்திறன் கொண்ட சீமெந்து அரைக்கும் ஆலையினூடாக, டோக்கியோ சீமெந்தின் மொத்த உற்பத்தி கொள்ளளவில் 1 மில்லியன் மெட்ரிக் டொன் சேர்க்கப்பட்டுள்ளது. அதனூடாக, வருடமொன்றில் 4 மில்லியன் மெட்ரிக்டொன் சீமெந்து உற்பத்தி மேற்கொள்ளக்கூடிய வசதியை கொண்ட மாபெரும் சீமெந்து உற்பத்தியாளராகத் திகழ்கிறது.

இந்த அங்குரார்ப்பண நிகழ்வில் இலங்கைக்கான ஜப்பானிய பதில் தூதுவர் நவோகி கமோஷிடா, ஜப்பானிய தூதரகத்தின் நிதி இணைப்பாளரும் முதல் செயலாளருமான டகாஃபுமி நகா



நிஷி, கிழக்கு மாகாண ஆளுநர் பேராசிரியர் ஜயந்த லால் ரட்னசேகர மற்றும் திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ரொஷான் அக்மீமன ஆகியோருடன், அரசாங்க அதிகாரிகளும், அமைச்சின் அதிகாரிகளும் கலந்து கொண்டனர். டோக்கியோ சீமெந்து குழுமத்தின் தவிசாளர் கலாநிதி. ஹர்ஷ கப்ரால் PC மற்றும் முகாமைத்துவ பணிப்பாளர் எஸ்.ஆர். ஞானம், டோக்கியோ சீமெந்தின் தொழில்நுட்ப பங்காளரான மிட்சு பிஷி உபே சீமெந்து கோர்பரேஷனின் முகாமைத்துவ நிறைவேற்று அதிகாரி மசாஹரு சன்சுயி ஆகியோரும் அழை ப்பின் பேரில் நிகழ்வில் கலந்து கொண்டனர். பணிப்பாளர் சபை அங்கத்தவர்கள், நிர்வாகத்தினர் மற்றும் ஊழியர்கள் ஆகியோரும் நிகழ்வில் பங்கேற்றிருந்தனர்.

இலங்கைக்கான ஜப்பானிய பதில் தூதுவர் நவோகி கமோஷிடா கருத்துத் தெரிவிக்கையில், “நாடு முழுவதிலும் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டு சில ஆண்டு களுக்குள் டோக்கியோ சீமெந்து வெற்றிகரமாக ஆலை விரி வாக்கத்தை மேற்கொண்டுள்ளதை காண்பதையிட்டு நாம் மகிழ்ச்சியடைகிறோம்.

டோக்கியோ சீமெந்து நிறுவனத்தின் விரிவாக்கம் என்பது காலகட்டத்துக்கு அவசியமானதாக அமைந்திருப்பது மட்டுமன்றி, தொலைநோக்கத்தைக் கொண்டதாகவும் உள்ளது. நிறுவனத்தின் மூலோபாய தொலைநோக்கு என்பது, தேசிய முன்னேற்றத்துக்கு பங்களிப்பு வழங்கும் என்பதுடன், இந்தப் பிராந்தியத்துக்கும், நாட்டுக்கும் எதிர்காலத்துக்கான எதிர்பார்ப்பை வழங்குவதாக அமைந்திருக்கும்.

ஜப்பானிய மற்றும் இலங்கையின் வியாபாரங்கள் இணைந்து நிலைபேறான விருத்தி மற்றும் பரஸ்பர சுபீட்சத்தை ஏற்படுத்தும் வகையில் செயலாற்றுவதற்கு இது தெளிவான உதாரணமாக அமைந்துள்ளது. எமது இரு நாடுகளுக்குமிடையிலான உறுதியான மற்றும் நீண்ட பொருளாதார பந்தத்துக்கான எடுத்துக்காட்டாக இந்தப் பங்காண்மை அமைந்துள்ளது.” என்றார்.

# புதிய பாராளுமன்ற உறுப்பினராக பதவியேற்பு

(கொழும்பு)


ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தேசியப்பட்டியல் பாராளுமன்ற உறுப்பினராக மொஹமட் ஷெரிப் அப்துல் வஸீத் நேற்று சபாநாயகர் கலாநிதி ஜகத் விக்ரமரத்ன முன்னிலையில் பதவிப் பிரமாணம் செய்து கொண்டார்.

மொஹமட் சாலி நளீம் இராஜினாமா செய்ததைத் தொடர்ந்து வெற்றிடமாக இரு ந்த பாராளுமன்ற இடத்தை நிரப்ப வசீத் எம்.பி.யாக பதவியேற்றார்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பொதுச் செயலாளரால் அப்துல் வசீத் தேசியப் பட்டியல் எம்.பி.யாகத் தேர்ந்தெடுக்கப்பட்டதை உறுதிப்படுத்தும் வர்த்தமானி அறிவிப்பை இலங்கை தேர்தல் ஆணையகம் வெளியிட்டது.


2025 ஆம் ஆண்டு உள்ளூராட்சித் தேர்தலில் ஏறாவூர் நகரசபைக்கு போட்டியிடுவதற்காக, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தேசியப் பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர் மொஹ மட் சாலி நளீம் மார்ச் 14 அன்று தனது பதவியை இராஜினாமா செய்தமை குறிப்பிடத்தக்கது. (நி)

கொழும்பினைத் தளமாகக் கொண்ட Q4US முன்னணி மென்பொருள் நிறுவனத்தினால் நாடளாவிய ரீதியில் நடத்தப்பட்ட Code Art Challenge போட்டியில் SLIIT NORTHERN UNI இன் மாணவர் குழுவானது தேசிய



ரீதியில் முதலிடத்தினைப் பெற்றுக்கொண்டது. வெற்றிபெற்ற இம்மாணவர் குழுவானது அரச மற்றும் தனியார் பல்கலைக்கழகங்களின் 16 மாணவர்குழுக்களுடன் போட்டியிட்டபோது SLIIT NORTHERN UNI Faculty of Computing இன் முதலாம் வருடத்தினைச் சேர்ந்த திரு. ஜெ.ஜெயராகவன், திரு. வி.சஞ்சீவ், திரு. ம.கௌசிகன், மற்றும் திரு. பி.கிருஷோத் ஆகியோர் இக்குழுவில் இடம்பெற்று தமது நிரலாக்கத் திறனினாலும் புத்தாக்க நோக்குதலினூடாகவும் வெற்றியாளர்களாக முதலாமிடத்திற்குத் தெரிவுசெய்யப்பட்டு ரூபா ஒரு இலட்சத்தினைப் பரிசுத் தொகையாகப் பெற்றனர். மேற்படி Code Art Challenge ஆனது இரண்டு மணிநேரத்தில் algorithms இனை பயன்படுத்தி கலைப் படைப்புகளை உருவாக்க மாணவர்களிடம் கோரி [illegible]க மொழியினையும் (programming language) பாவிக்க [illegible]மைவாக மேற்குறித்த போட்டிகள் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாவற்குழி சிவபூமி திருவாசக அரண்மனை சிவதெட்க்ஷணாமூர்த்திக்கு கடந்த 7 ஆம் திகதி திங்கட்கிழமை சிறப்பாக இடம்பெற்றது. இந்நிகழ்வில் 108 சங்காபிஷேகம், விஷேட பூஜை நடைபெற்று மதியம் மகேஸ்வரபூஜையும் நடைபெற்றது.



மக்கள் வங்கியின் 64 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு இலங்கை வங்கி ஊழியர் சங்கத்தின் (மக்கள் வங்கிக் கிளை) இணைப்பாளர் ப.உதயணன் தலைமையில் கடந்த 6 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மக்கள் வங்கி ஸ்டான்லி வீதிக் கிளையில் இரத்ததான முகாம் இடம்பெற்றது. இந்நிகழ்வில் குருதிக்கொடை வழங்கிய கொடையாளிகளுக்கு ரீசேட் மற்றும் மரக்கன்றுகள் வழங்கி கௌரவிக்கப்பட்டன.

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 300 | 300 | 350 | 350 | 350 |
| உருளைக்கிழங்கு | 200 | 200 | 180 | 180 | 200 |
| பச்சைமிளகாய் | 400 | 450 | 450 | 350 | 400 |
| தக்காளி | 180 | 200 | 250 | 150 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 280 | 300 | 300 | 300 | 250 |
| கோவா | 300 | 450 | 450 | 300 | 400 |
| கரட் | 600 | 400 | 450 | 370 | 500 |
| பூசணி | 120 | 150 | 150 | 120 | 200 |
| புடோல் | 150 | 150 | 200 | 100 | 200 |
| வாழைக்காய் | 100 | 100 | 120 | 80 | 150 |
| சின்ன வெங்காயம் | 350 | 150-350 | 350 | 350 | 400 |
| பெரிய வெங்காயம் | 140 | 180 | 120 | 120 | 150 |
| பாகற்காய் | 600 | 600 | 700 | 600 | 600 |
| வெண்டக்காய் | 150 | 150 | 200 | 120 | 300 |
| கருணைக் கிழங்கு | 350 | 350 | 250 | 250 | 400 |
| பயற்றங்காய் | 350 | 300 | 300 | 300 | 200 |
| லீக்ஸ் | 300 | 300 | 350 | 250 | 400 |
| பீற்றூட் | 250 | 250 | 350 | 240 | 250 |
| கறிமிளகாய் | 600 | 550 | 700 | 550 | 800 |
| முருங்கைக்காய் | 500 | 500 | 700 | 420 | 800 |
| போஞ்சி | 400 | 500 | 600 | 450 | 800 |
| கத்தரிதம்புள்ள | 200 | 200 | 350 | -- | 300 |
| கீரை - 1 பிடி | 100 | 80-180 | 100 | 50 | 100 |
| தேசிக்காய் | 350 | 300 | 300 | 250 | 300 |
| தேங்காய் (ஒன்று) | 160 | 160 | 150 | 80-150 | 130-160 |
| இராசவள்ளி | 600 | 700 | 600 | 580 | 700 |
| வெங்காயப்பூ | 400 | 400 | 600 | -- | 400 |
| முள்ளங்கி | 150 | 160 | 200 | 120 | 200 |
| பொன்னாங்காணி | 80 | 50 | 150 | 100 | 60 |
| வல்லாரை | 80 | 70 | 100 | 80 | 80 |
| ஈரப்பலா | 150 | 200 | 80 | -- | 200 |

## நூல் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

நாடகர் க.பாலேந்திராவின் "பிரத்தியேகக் காட்சி" - ஏழு நாடகங்களும் பதிவுகளும் என்னும் நூல், எங்கட புத்தகங்கள் நிறுவனத்தின் வெளியீடாக வெளிவர இருக்கிறது. அதன் வெளியீட்டு விழா எதிர்வரும் 12 ஆம் திகதி சனிக்கிழமை அன்று பிற்பகல் 3.30 மணியளவில் 18/2, திருவடி நிழல், அம்மன் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள எங்கட புத்தகங்கள் இல்லத்தில் நடைபெறவுள்ளது.

இவ் விழாவில் கலந்து சிறப்பிக்குமாறு நாடகத்துறை சார்ந்த அனைவரையும் அன்புடன் அழைப்பதாக எங்கட புத்தகங்கள் நிறுவனத்தினர் தெரிவித்திருக்கின்றனர். (3)

## முட்டை நாடகம்

(யாழ்ப்பாணம்)


இணுவைத் தமிழ்ச் சங்கம், இணுவில் அறிவாலய ஆதரவில் இணுவில் கந்த சுவாமி ஆலய இளந்தொண்டர் சபையின் சண் நாடகக் குழுவினர் வழங்கும் "முட்டை நாடகம்" நாளைமறுதினம் வியாழக்கிழமை மாலை 5.30 மணிக்கு இணுவில் அறிவாலயத்தில் இடம்பெறவுள்ளது. (3)

## கருத்துரையும் கலந்துரையாடலும்

(யாழ்ப்பாணம்)

சமூக விஞ்ஞானப் படிப்பு வட்டம் நடத்தும் "போர்களும் புதைகுழிகளும்" கருத்துரையும் கலந்துரையாடலும் நாளை வியாழக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு இல 134/62 கொக்குவிலில் அமைந்துள்ள தேசிய கலை இலக்கியப் பேரவையின் கவிஞர் முருகையன் கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் தொடக்கவுரையினை அரசியல், சமூக செயற்பாட்டாளர் எஸ்.சிவபாலன், கருத்துரையினை யாழ்.பல்கலைக்கழக மாணவன் ஜெ.ஜாதுஷன் ஆகியோரும் நிகழ்த்தவுள்ளனர். (3)



## நலமளிக்கும் தேரோடும் நயினையில் இன்று...!!

சிந்துபுகழ் நயினையுற்ற சிவகாம சுந்தரியின்
சிறப்பினை உலகறியத் தேரோடும்!
முந்துதமிழ் வாழ்த்திடவே வடிவாம் பிகைக்கின்று
மூத்தபுகழ் நயினைதனில் தேரோடும்!
வந்ததுயர் நீங்க வருந்துயருக் கணைபோட
வல்ல உமையவளின் தேரோடும்
விந்தையுள தெய்வமாய் வீற்றிருக்கும் சக்தியென
வியந்து பேசவைக்கும் தேரோடும்
ஆகாயப் பூக்களென வட்டமிடும் வெண்முகில்கள்
ஆங்காங்கே நிழலளித்துச் செல்ல
ஆராதனை செய்கின்ற அடியார்கள் கூட்டம்
அள்ளி மலர்தூவி வாழ்த்த
பேராயிரம் பூண்ட பெருமாட்டி உலா வந்தே
பெருகிடும் கருணையினால் கண்மலர்ந்து
பாராளும் அன்னையெனப் பக்தருக் கருள்தலால்
பக்தியில் திளைத்திடும் நயினை!

இரா.தில்லைராஜன்

## நாகபூசணியே நல்லருள் நல்கிடம்மா

அம்பிகையே அபிராமி வல்லியே
ஆனந்த சொருபியே அமுதசுரபியே
உம்மையே நம்பி உன்னடி வந்தோம்
உமையாளே உள்ளம் உருகிடம்மா
செம்மணச் செல்விக்கு ஈசனார் உதவியது போல
செம்மணிப் புதைகுழிக்கு செங்கோல் நாட்டிடம்மா
நம் தமிழினமும் வாழ ரதமேறும் தாயே
நயினை நாகபூசணியே நல்லருள் நல்கிடம்மா

இ.டினேஸ்சன், கோண்டாவில்.

## குறுந்திரைப்பட கண்காட்சியும் கலந்துரையாடலும்

(யாழ்ப்பாணம்)

உரும்பிராய் ஞான வைரவ கோவிலடி நிலையத்தின் முழுநிலா நாள் குறுந்திரைப்படக் கண்காட்சியும் கலந்துரையாடலும் நாளை வியாழக்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு சனசமூக நிலைய மேல் மண்டபத்தில் சன சமூக நிலையத் தலைவர் இரா.ஜெயக்குமார் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இதில் போதையை ஒழியடா, சுவாசிப்பு, விபத்து, கணிப்பு ஆகிய குறுந்திரைப்படங்கள் காண்பிக்கப் படவுள்ளன. (3)



கிளிநொச்சி மாவட்டத்தின் 55 ஆம் படைப்பிரிவின் புதிய இராணுவக் கட்டளை தளபதியாக பதவியேற்றுள்ள மேஜர் ஜெனரல் WMAB விஜயகோன் கடந்த 7 ஆம் திகதி கிளிநொச்சி மாவட்ட பதில் அரசாங்க அதிபர் எஸ்.முரளி தரனை மரியாதை நிமித்தம் சந்தித்துக் கலந்துரையாடினார். கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் அலுவலகத்தில் காலை 9.15 மணியளவில் குறித்த சந்திப்பு நடைபெற்றது. (படம்:தேவானந்தன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனிநபர் காணியை அபகரிக்கும் பொலிஸார்

## காணிக்குள் நுழைய பொலிஸாருக்கு தடை விதிப்பு

(வவுனியா)

வவுனியா, ஓமந்தைப் பொலிஸார் பொலிஸ் நிலையம் அருகில் உள்ள தனிநபருக்கு சொந்தமான காணியினை ஆக்கிரமித்து வருவதாகக் குற்றம் சாட்டப்பட்ட நிலையில் குறித்த காணிக்குள் நுழைய பொலிஸாருக்கு வவுனியா பிரதேச செயலாளரால் தடை விதிக்கப்பட்டுள்ளது.

வவுனியா, ஓமந்தைப் பொலிஸ் நிலையத்திற்கு என பிறிதொரு இடத்தில் காணி ஒதுக்கப்பட்டுள்ள நிலையில் அவர்கள் பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்திற்கு சொந்தமான காணியில் நிலை கொண்டுள்ளனர். குறித்த காணிக்கு அருகில் இருந்த தனிநபர் ஒருவரின் காணியையும் அபகரித்துள்ள பொலிஸார் அதனை துப்பரவு செய்து கையகப்படுத்துவதற்கான முயற்சிகளில் ஈடுபட்டனர்.

இது தொடர்பில் அரசியல்வாதிகளின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்ட நிலையில் வவுனியா பிரதேச செயலகத்தில் பிரதி அமைச்சர் உபாலி சமரசிங்க தலைமையில் இடம் பெற்ற பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் குறித்த காணியை பொலிஸார் கையகப்படுத்த முடியாது எனவும், அதற்குள் செல்லக் கூடாது எனவும் தீர்மானிக்கப்பட்டிருந்தது.

அதனையும் மீறி நேற்று முன்தினம் பொலிஸார் குறித்த காணிக்குள் சென்று துப்பரவுப் பணிகளில் ஈடுபட்ட போது காணி உரிமையாளரும் வவுனியா தெற்கு பிரதேச சபை தவிசாளர் மற்றும் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் வவுனியா தெற்கு பிரதேச சபை உறுப்பினர், தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் மாவட்ட அமைப்பாளர் ஆகியோர் சென்று பொலிஸாருடன் முரண்பட்டிருந்ததுடன், அரச அதிபர் மற்றும் பிரதேச செயலாளர் ஆகியோரின் கவனத்திற்கும் கொண்டு சென்றனர்.

இதனையடுத்து, ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத் தீர்மானத்திற்கு அமைய குறித்த காணிக்குள் ஓமந்தைப் பொலிஸார் நுழைவதற்கு தடை விதித்து வவுனியா பிரதேச செயலாளர் இ.பிரதாபனால் ஓமந்தை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிக்கு கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (8-250)

# இந்திய துணைத்தூதுவர்-காரைநகர் பிரதேச சபையினர் சந்திப்பு




(அராலி)

யாழ்.இந்தியத் துணைத் தூதுவர் சாய் முரளிக்கும் காரைநகர் பிரதேச சபையினருக்குமிடையே கலந்துரையாடல் ஒன்று யாழ்.இந்தியத் துணைத் தூதரகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இதன்போது கடல்நீரை சுத்திகரித்துக் குடிநீராக்கி காரைநகருக்கு வழங்குதல், பொன்னாலை பாலத்திற்கு 3 மைல் நீளத்திற்கு 80 லட்ச ரூபா செலவில் சோலர் லைட் பொருத்துதல், வறுமைக்கோட்டிற்கு கீழ் உள்ள குடும்பங்களிற்கு 175 மில்லியன் செலவில் வீடமைப்புத் திட்டங்கள் வழங்கல் போன்ற கோரிக்கைகள் இந்தியத் துணைத் தூதுவரிடம் முன்னெடுக்கப்பட்டன.

இந்நிலையில் இந்த மூன்று கோரிக்கைகளும் ஏற்றுக்கொள்ளப்பட்டு நடைமுறைப்படுத்துவதற்கு இணக்கம் காணப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (8-104)

# முன்னாள் போராளி பிணையில் விடுதலை

(வவுனியா)

முன்னாள், போராளிகள் நலன் புரிச்சங்க வவுனியா மாவட்ட தலைவருமான ஆனந்தவர் மன் எனும் அரவிந்தன் கடந்த ஒரு வருடத்துக்கும் மேலாக பயங்கரவாதச் தடைச் சட்டத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் நேற்று முன்தினம் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

கடந்த 2024 மார்ச் மாதம் விடுதலைப் புலிகள் அமைப்பை ஊக்கிவிக்கும் வகையில் முகநூலில் பதிவுகள் இட்டதாக அவர் கைதாகி இருந்தார். ரிஜடியினரால் குறித்த முகநூல் பதிவு தொடர்பில் வாக்கு மூலம் பெறுவதற்காக அழைக்கப்பட்ட நிலையில் அவர் பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு ஒரு வருடத்திற்கு மேலாக தடுத்து வைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (8-250)

# சாவகச்சேரி சந்தைக்கு நகரசபை குழு விஜயம்



(அராலி)

யாழ் சாவகச்சேரி நகராட்சி மன்ற நிர்வகிப்புக்குள் உள்ள நவீன சந்தைக் கட்டடத் தொகுதி மற்றும் மரக்கறி, பழச் சந்தைத் தொகுதிகளை தவிசாளர், உப தவிசாளர் மற்றும் உறுப்பினர்கள், நகரசபையின் பொதுச் சுகாதார பரிசோதகர் நேற்று முன்தினம் காலை நேரில் சென்று நிலைமைகளை ஆராய்ந்தனர்.

சந்தைத் தொகுதியில் உள்ள விற்பனை நிலையங்களை ஒழுங்கமைத்து வியாபாரிகளுக்கும் நுகர்வோருக்கும் பாதிப்பு ஏற்படாதவாறு சந்தைத் தொகுதியை புனரமைத்தல் மற்றும் நடைபாதைகளை ஒழுங்குபடுத்தி நகரத்தை அழகுபடுத்துவதற்கான செயற்பாடுகளை ஆரம்பிப்பதற்கும் தவிசாளரால் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டது.

மேலும் சந்தை தொகு தியில் காணப்படும் தேவையற்ற பெயர்ப்பலகைகள், பொருட் கள் மற்றும் கழிவுகளை உடனடியாக அகற்றுமாறு சந்தை காப்பாளருக்கு உப தவிசாளர் அறிவுறுத்தல் வழங்கி னார். (8-104)

# டிப்பர் மீது துப்பாக்கிச்சூடு சாரதி தப்பியோட்டம்

(தருமபுரம்)

கிளிநொச்சியில் பொலிஸாரின் சமிக்ஞையை மீறி சென்ற டிப்பர் மீது பொலிஸார் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர்.

தருமபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கல்லாறுப் பகுதியில் சட்டவிரோதமாக அனுமதிப் பத்திரம் இன்றி மணல் ஏற்றிய டிப்பர் வாகனத்தை புளியம் பொக்கணை சந்திப்பகுதியில் வைத்து பொலிஸார் மறித்து சோதனை செய்ய முற்பட்ட போது சமிக்ஞையை மீறிச் சென்ற டிப்பர் மீது பொலிஸார் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர்.

பொலிஸாரின் துப்பாக்கி பிரயோகத்தில் டிப்பர் வாகனம் காற்றுப் போன நிலையில் வாகனத்தை விட்டு சாரதி தப்பியோடியுள்ளார்.

மணல் மற்றும் டிப்பர் வாக னத்தை மீட்ட பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (8-316)


**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், ஆரிய திராவிட பாஷாவிருத்திச் சங்கத்துடன் இணைந்து திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம் ஊடாக நடாத்தும் தமிழ்ப் பாலபண்டிதர் தகைமைச் சான்றிதழ் கற்கைநெறி-2024/2025 (அணி-II)**

தமிழ்ப் பாலபண்டிதர் தகைமைச் சான்றிதழ் கற்கைநெறிக்கான விண்ணப்பங்கள் தகுதி வாய்ந்த விண்ணப்பதாரிகளிடமிருந்து கோரப்படுகின்றன.

**அனுமதிக்கான தகைமைகள்**

விண்ணப்பதாரி கீழ்வரும் தகைமைகளில் ஏதாவது ஒன்றினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

1. யாழ்ப்பாண ஆரிய திராவிட பாஷாவிருத்திச் சங்கத்தினது தமிழ்ப் பாலபண்டிதர் தகைமைக்கான பிரவேச பரீட்சையிற் சித்தி பெற்றிருத்தல்.

அல்லது

2. சைவப் புலவர் அல்லது சைவசித்தாந்த பண்டிதராயிருத்தல்.

அல்லது

3. க.பொ.த உயர்தரப்பரீட்சையில் மூன்று பாடங்களில் சித்தி பெற்றிருப்பதுடன் தமிழ் மொழிப்பாடத்தில் திறமைச் சித்தி (C) பெற்றிருத்தல்.
4. க.பொ.த உயர்தரபரீட்சையில் எந்தவொரு பாடத்துறையிலாயினும் பல்கலைக்கழகத்திற்கு அனுமதி பெறுவதற்கான தகுதி பெற்றிருத்தல்.

அல்லது

5. ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை அல்லது தேசிய கல்வியியற் கல்லூரி முதலான அங்கீகரிக்கப்பட்ட ஏதாவது நிறுவனம் ஒன்றில் பயிற்றப்பட்ட ஆசிரியராயிருத்தல்.

கற்கைநெறிக்கான காலம் - ஒரு வருடம் (இரண்டு பருவங்கள்)
கற்கைநெறி மூலம் - வார இறுதி நாட்களில் நேரடி வகுப்புக்கள்
விண்ணப்பப்படிவம் - ரூபா 200.00

**விண்ணப்பிக்கும் முறை**

திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தின் இணையத்தளத்தில் (www.codl.jfn.ac.lk) பதிவினை மேற்கொள்ள முடியும். எந்தவொரு மக்கள் வங்கி கிளையிலும் (89002278003288) எனும் வங்கி கணக்கிலக்கத்திற்கு விண்ணப்பக் கட்டணமாக 200.00 ரூபாவினை செலுத்தி அதன் பற்றுச்சீட்டின் மூலப்பிரதியினை இணையத்தள முகவரியில் பதிவேற்றம் செய்யப்படுவதுடன் விண்ணப்பத்தின் மூலப்பிரதியை நேரடியாக அல்லது தபால் மூலமாக "சிரேஷ்ட உதவிப்பதிவாளர், திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம், யாழ்.பல்கலைக்கழகம், திருநெல்வேலி" எனும் முகவரிக்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

தபால் மூலம் அனுப்பப்படும் விண்ணப்படிவங்களின் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "தமிழ்ப் பாலபண்டிதர் தகைமைச் சான்றிதழ் கற்கைநெறி - 2024/2025 (அணி-II)" எனக் குறிப்பிட்டு அனுப்பி வைக்கவும்.

**விண்ணப்ப முடிவுத்திகதி 24.07.2025**

**பதிவாளர்**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,**
**திருநெல்வேலி**

(சி-3368)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவசாயத்தில் நானோ தொழில்நுட்பத்தின் ஆளுமை



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை, விவசாய பீடம்
யாழ். பல்கலைக்கழகம்

**வாருங்கள் எம்மினிய உறவுகளே!**

நானோ தொழில்நுட்பம் (Nano technology) என்பது அணு மற்றும் மூலக்கூறு அளவிலான பொருட்களை கையாளும் மற்றும் உருவாக்கும் அறிவியலாகும். இது மிகச்சிறிய அளவில் அதாவது 1 முதல் 100 நானோ மீற்றர்கள் வரையிலான அளவில் பொருட்களைக் கையாளும் அதியுயர் தொழில்நுட்பமாகும். இதனை அழகுத் தமிழில் மீநுண்தொழில்நுட்பம் எனவும் அழைக்கின்றதுடன் நானோ என்பது ஒரு நீள் அல்லது பருமஅளவின் அலகாகும்.

ஒரு நானோ மீற்றர் என்பது ஒரு மீற்றரில் ஒரு பில்லியனில் ஒரு பங்குக்கு சமனானதாகும் மாறாக நானோ மீற்றர் என்பது ஒரு மீற்றரை நூறு கோடி துண்டுகளாக்கி அதிலொரு துண்டின் அளவாகும். இந்த தொழில் நுட்பத்தின் மூலம் சிறிய அளவிலான பொருட்களைக் கொண்டு புதிய பொருட்களை உருவாக்கலாம் அல்லது ஏற்கெனவே உள்ள பொருட்களின் பண்புகளை மாற்றியமைக்கலாம்.

நானோ தொழில்நுட்பம் அறிவியலின் அடுத்த பாய்ச்சல் என அறியப்படுகின்றது. மூலக்கூறுகளின் அமைப்பை மாற்றியமைக்கும் தொழில்நுட்பமாக எமக்கு தேவையான பலநல்ல விடயங்களுக்கு பயன்படும் இத்தகைய தொழில்நுட்பத்தின் வருகை ஆளுமை நிறைந்ததாக புத்தாக்கங்களுக்கும் புதிய பொருட்களின் உருவாக்கத்திற்கும் உதவுகின்றது.

மருத்துவம், அன்றாடப் பயன்பாட்டிலுள்ள பொருட்கள், வினைத்திறனான பொருட்களின் உருவாக்கம், தொழிற் றுறையின் பரிமாணத்தை விரிவாக்கும். அதே நேரத்தில் வினைத்திறனாக விரயமின்றி ஊக்குவிக்கவும் இன்னும் விஸ்தரிக்கவும் இயலும். அணுத்துகளைக் காட்டிலும் நுட்பமான நுணுக்கமான தளத்தில் இது செயற்படுவதுதான் இதற்குக் காரணம்.


உலகளவில் தற்போது 800 மில்லியன் மக்கள் உணவுக்காக ஏங்கிக்கொண்டிருக்கின்றனர் எனும் துன்பகரமான செய்தி விவசாய உற்பத்தியிலீடுபடும் அனைவரையும் மீண்டும் ஒரு கணம் சிந்திக்க வைத்திருக்கின்றது. இத் தொழில்நுட்பத்தின் மூலம் விவசாயத்தில் புரட்சியே நடைபெற்றிருக்கின்றது.

பயிருற்பத்தியை பெருக்குவதற்கும் வளங்களின் முகாமைத்துவத்தை அதிகரிப்பதற்கும், உணவுப் பாதுகாப்பை உறுதிசெய்வதற்குமாகும். குறிப்பாக இதன் மூலம் வினைத் திறனான முறையில் துல்லியமாக தேவையான ஊட்டச்சத்தினை வழங்கவும் பீடைநாசினி பிரயோகத்தை மேற்கொள்ளவும் முடியும். இதனால் சூழலிலேற்படும் தாக்கத்தினை குறைப்பதற்கும் மேலும் சிறப்பாக கண் காணிப்பதற்கும் விவசாய செயற்பாடுகளை முகாமைத்துவப்படுத்தவும் முடியும்.

**1. அதிகரித்த ஊட்டச்சத்து மற்றும் பீடைநாசினி வழங்கல்.**

இந்தத் தொழில்நுட்ப பொறிமுறையின் போது நானோ பசளைகள் தாவரங்களுக்கு வழங்க வேண்டிய பசளைகளை சுற்றி உறை போல இருப்பதனால் பசளைகள் தாவரத்திற்கு இலகுவாக கிடைக்க வழியேற்படுகின்றது. அத்துடன் தேவையான பசளைப் பிரயோகம் நடைபெறுவதனால் பசளைகள் சூழலுக்கு வழிந்து செல்வது வெகுவாக குறைக்கப்படுகின்றது. மேலும் நானோ பீடைநாசினிகள் பீடைகொல்லியை கிரமமான முறையில் பீடைகள் அதிகமாகவுள்ள பகுதியில் வெளிவிடுவதனால் மிகக்குறைந்தளவு பீடைகொல்லிகளே தேவைப்படுகின்றதுடன் சூழலில் உள்ள நன்மைதரும் உயிரினங்களையும் மிகக்குறைந்தளவில் பாதிக்கின்றது.

## இனியொரு பசுமைப்புரட்சிக்கு...



**2. துல்லியமான பயிர்ச் செய்கையும் கண்காணிப்பும்:**

மிகச்சிறிய நானோ உணரிகள் வயல் நிலத்தில் வைக்கப்பட்டு மண்ணின் தன்மை குறிப்பாக ஈரப்பதன் ஊட்டச்சத்தினளவு மற்றும் பீடைகள் நோய்கள் இவற்றுடன் தாவரத்தின் சுகாதாரம் என்பன கண்காணிக்கப்படுவதனால் முடிவெடுத்தலிலும் விவசாயபெருமக்களுக்கு உதவியாயிருக்கும்.

**3.சிறப்பான நீர்ப்பாய்ச்சல்:**

நானோ உணரிகள் மூலமாக நீர்ப்பாசனம் வரையறுக்கப்பட்டு தேவையான நேரத்தில் தேவையான அளவில் நீர்ப்பாய்ச்சல் நடைபெறும். அத்துடன் மண்ணில் உள்ள நீரினளவு. ஈரப்பதன் மற்றும் ஏனைய தகவல்கள் அனைத்தும் பெறப்பட்டு நீரினை சிக்கனமாக வினைத்திறனாக பயன்படுத்துவதற்கு வழி கிடைக்கின்றது. இதன் மூலமாக நீர் விரயமாதல் தவிர்க்கப்படுவது சாத்தியமாகின்றது.

**4.பயிர்பாதுகாப்பு அதிகரிக்கின்றது:**

தாவர நோய்களை இனங்காண்பதற்கான வழிவகைகள் மற்றும் முறைகள் உருவாக்கப்பட்டிருப்பதனால் தாவர நோய்கள் விரைந்து பரவாமல் வருமுன்கூட்டியே வழங்கப்படும். அத்துடன் தாவர நோய்களுக்கான காரணங்கள் மற்றும் ஏனைய சூழலியல் காரணிகள் என்பன கணக்கிலெடுக்கப்பட்டு அதற்குரிய மரியாதை செய்யப்படும்.

**5.நோய்க்கட்டுப்பாடு அவசியமாகின்றது:**

நானோதுணிக்கைகளை தீமை தரும் நுண்ணங்கிகளிலிருந்து பாதுகாப்பதற்கு பயன்படுத்துகின்றனர். அத்துடன் மேற்படி நுண்ணங்கிகளின் அளவு அவற்றினால் ஏற்படும் தீமைகள் என்பனவும் துல்லியமாக அறியப்பட்டு அதற்கான தீர்வுகள் வழங்கப்படும்.

**6. தரமான உணவும் அதனது பாதுகாப்பும் உறுதி செய்யப்படுகின்றது:**

நுண்ணங்கிகளின் தொற்று இல்லாமல் உணவு பொதிசெய்யப்படுவது நானோதொழில்நுட்பத்தின் மூலம் சாத்தியமாகின்றது. அத்துடன் உணவினது பாதுகாப்பினை கண்காணிப்பதற்கும் நானோ தொழில்நுட்பம் பயன்படுகின்றது.

**7.பேண்தகு நிலையை தக்கவைப்பதில் உதவுகின்றது:**

உள்ளீடுகளின் பயன்பாடு தீர்மானிக்கப்படுவதனாலும் அவற்றின் அளவு மட்டுப்படுத்தப்படுவதுடன் விரயமாகும் உள்ளீடுகளின் அளவு மிகவும் குறைக்கப்படுகின்றமை இதிலுள்ள சிறப்பம்சமாகும். அத்துடன் பேண்தகு விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் நானோ தொழில் நுட்பத்தில் வழியிருக்கின்றது.

**8. சூழலில் ஏற்படும் தாக்கத்தை குறைப்பதற்கு உதவுகின்றது:**

நானோ தொழில்நுட்பத்தினை பயன்படுத்தி சூழல் ஏற்படும் பாதிப்புக்களை சரிசெய்வதற்கும் இதன் மூலமாக சூழல் மாற்றத்தினை தாங்கி வளரக்கூடிய தாவரங்களை உருவாக்குவதற்கும் நீரினை தேவையானளவிற்கு பயன்படுத்தும் தாவரங்களை உருவாக்கவும் இன்னும் சூழல் மாற்றத்தினால் தாவரங்களில் ஏற்படும் பாதிப்பிலிருந்து அவற்றை காப்பாற்றவும் வழியிருக்கின்றது.

நானோ தொழில்நுட்பத்தின் பயன்பாடு இன்னும் பல கண்டுபிடிப்புக்கள் மூலம் விரிவாக்க வழியிருக்கின்றது என்பதுடன் இத்தொழில்நுட்பத்தின் பயன்பாடு எமது விவசாயப் பெருமக்களுக்கு கிடைக்க ஆவனசெய்தலும் இதில் அடங்குகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நயினை நாகபூசணி அம்பாளின் இரதோற்சவ சிறப்பு மலர்


நம்பிக்கை | நாணயம் | கைராசி என்றென்றும் உங்கள்...

ARANA JEWELLERY

# ஆரணா ஜுவல்லரி





பாம்பின் மீது பாற்கடலில் பள்ளிகொண்டு
வேண்டுவோர்க்கு வேண்டும்
வரம் தரும் நயினாதீவுத் தாயே!
உன் இரதோற்சவம் கண்டால் எம்வாழ்வு
செழிக்குமல்லவா.

ஆரணாவின்
அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள்
அனைவருக்கும்
நயினைத் தாயவளின்
அருட்கடாட்சம் கிடைக்க
அவள் திருவடிகளை இருகரம் கூப்பி
வேண்டுகின்றோம்.



இல. 91, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

☎ 021 222 3732 Arana Jewellery

(சி-3365)



நயினை நாகபூசணியின் அருளாட்சி அனைவருக்கும் கிடைக்கட்டும்



# கிருபா லேணர்ஸ்

KIRUBAA LEARNERS கிරුබා ලර්නර්ස්

HOTLINE 077 722 5292

அரச அங்கீகாரம் பெற்ற வடக்கின் முதல் தர
சாரதி பயிற்சிப் பாடசாலை

தற்போது
வேலணையிலும்
077 222 7121

- எழுத்துப்பரீட்சைக்கு விசேட வீதி ஒழுங்கு வகுப்புக்கள்.
- அசோக் லேடன் பஸ் மூலமான கனரக வாகனப் பயிற்சி.
- மும்மொழியிலும், உங்களுக்கு விரும்பிய நேரங்களிலும் வாகன பயிற்சிகள்.
- சகல கிளைகளிலும் பயிற்சி வகுப்புக்கள்.
- தவணைமுறைக் கட்டணங்கள்.
- குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் விரைவான சாரதி அனுமதிப்பத்திரம்.
- சர்வதேச சாரதி அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொடுக்கப்படும்.



**தலைமையகம்**
36, கச்சேரி நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம்.
021 222 6699 / 0767 22 5292
kirubalearners@gmail.com
www.kirubalearners.com

| | | | |
|---|---|---|---|
| யாழ் நகர் 021 222 4353 | நெல்லியடி 021 226 0700 | பருத்தித்துறை 021 226 1100 | ஆவரங்கால் 021 222 6688 |
| சித்தங்கேணி 021 225 2500 | சாவகச்சேரி 021 227 0700 | பூநகரி 077 120 5576 | சுன்னாகம் 021 224 2022 |
| விஸ்வமடு 077 8585 263 | மன்னார் 023 225 1656 | கிளிநொச்சி 021 228 5505 | வவுனியா 024 222 7777 |

(சி-3366)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அலைகடல் நடுவில் வீற்றிருந்து எமக்கருள் தரும்
நாக கன்னித்தாயே
உன்னை நாடிவரும் பக்தர்களுக்கு
அருள் அள்ளித் தந்திடம்மா!

# பூபாலசிங்கம் புத்தகசாலை
## Poobalasingham Book Depot



பாடசாலை பாட புத்தகங்கள், சகல விதமான கொப்பி வகைகள், O/L-A/L மீட்டல் வினாவிடைப் புத்தகங்கள், ஆங்கில பாடப் புத்தகங்கள் மற்றும் அனைத்துப் பாடசாலை உபகரணங்களும் எம்மிடத்தில் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்.



**கிளைகள்**

தலைமை
340, 202. செட்டியார் தெரு,
கொழும்பு-11
TP. No-2422321

இல.04, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
TP. No- 021 222 6693

இல.212, 1 ஆம் குறுக்குத்தெரு,
வேம்படிச் சந்தி, யாழ்ப்பாணம்.
TP. No- 021 222 1637

இல.309 A, 2/3 காலி வீதி,
வெள்ளவத்தை, கொழும்பு-06
TP. No-4515775

இல. 110, கொலண்ப்றோட்,
ஈஸ்ட்ஹம்,லண்டன்.
Eb2EP UK
TP. No-020 847 04416

(C-3362)



Ked
- Electro Dreams -

# KAPIL ELECTRO
## Dreams




ஆலயங்கள், நிறுவனங்கள், கடைகள், வாகனங்களுக்குத் தேவையான
**LED Light Board**
வேலைகள் சிறந்த முறையில் உத்தரவாதத்துடன் பெற்றுக்கொள்ள எம்மை நாடவும்

LED Light Board
திருத்த
வேலைகளும்
செய்து
கொடுக்கப்படும்




T.Kapilraj
077 172 0799 Jaffna

(F-3363)



# சிறி ஜெயந்தி
## நகை மாளிகை
**SRI JAYANTHY NAKAI MALIGAI**



அலைகடல்
நடுவில்
பாம்பில்
பள்ளிகொள்ளும்
பரமேஸ்வரித் தாயே!
உன் அடி நாடி வரும்
அடியவர்க்கு அருள்
அள்ளித் தா!




தேரேறிவரும் எம் தாயவளின் இரதோற்சவ நன்நாளில்
எமது அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள்
அனைவருக்கும் நல்லாசிகள் கிடைக்க அவள் தாள் பணிகின்றோம்.

180, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.


(J-3364)



# சித்தா றெஜிபோம்
## டிசைன்ஸ்

நாகம் குடைபிடிக்க
நாகரதம் ஏறிவந்து
தீயவரை வதம் செய்து
நல்லவர்க்கு வாழ்வளிக்கும்
நாக கன்னிகையே
எம் வாழ்வு சிறக்க
வரம் அருள்வாய்





இல. 49A அச்சுக்கூட வீதி,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.
075 039 4357 / 075 544 5901

(சி-3367)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கல்கியின்** பாகம் - 4

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 816





ஒன்றுமில்லை. இளவரசரின் முகத்துக்காகப் பார்க்க வேண்டியதாயிற்று. ஓகோ! கூடை கூடையாகப் புஷ்பம் கொண்டு வந்து வைத்திருக்கிறீர்களே! நீங்கள் இங்கிருந்து பொழிகிற மலர் மழையினால் இளவரசரின் கோபம் தணிந்து அவர் சாந்தம் அடைந்து விடுவார்! அதோ வந்து விட்டார்கள்! நான் கீழே போகிறேன்!" என்று சொல்லிவிட்டு, விடுவிடு வென்று மச்சுப் படிகளில் இறங்கிப் போனான்.

மணிமேகலையின் முகம் சுருங்கிப் புருவங்கள் நெரிந்தன. "அண்ணா! அவர் உங்கள் முதுகில் குத்தியது உண்மையாக இருக்கும் பட்சத்தில் அவரை எதற்காக இந்த மாளிகைக்குள் வர விட வேண்டும்?" என்றாள்.

"கண்ணே! நீ பேசாமலிரு! அதெல்லாம் புருஷர்களின் விடயம். நேற்றைக்குச் சண்டை போட்டுக் கொள்வார்கள் இன்றைக்கு கட்டிப் புரளுவார்கள்!" என்றாள் நந்தினி.

கந்தமாறன் புன்னகை புரிந்து, "அப்படியெல்லாம்

அந்த முன் வாசலின் மேன் மாடத்திலிருந்து பார்க்கும் போது கண்ணுக்கெட்டிய தூரம் பரந்திருந்த ஜன சமுத்திரத்தின் நடுவே, சுழிக் காற்றினால் ஏற்படும் நீர்ச் சுழலைப் போல ஓரிடத்தில் தோன்றிக் கொண்டிருந்தது. அந்தச் சுழலின் மத்தியில் அகப்பட்டுக் கொண்ட நாவாயைப் போல் மூன்று குதிரைகளும் அவற்றின் மேல் வந்த வீரர்களும் சில சமயம் தோன்றினார்கள். மறு கணம் ஜன சமுத்திரத்தின் பேரலைகளினால் அவர்கள் மறைக்கப்பட்டார்கள். அவ்விதம் ஏற்பட்ட சுழல் மேலும் மேலும் பிரயாணம் செய்து கோட்டையின் முன் வாசலை நெருங்கிக் கொண்டிருந்தது. கடைசியில், கோட்டை வாசலுக்கே வந்து விட்டது.

கோட்டை வாசலை அடைந்த மூன்று குதிரைகள் மீதும் வீற்றிருந்தவர்கள் ஆதித்த கரிகாலரும், பார்த்திபேந்திரனும் வந்தியத்தேவனுந்தான். அவர்களைத் தொடர்ந்து வந்த யானை குதிரை பரிவாரங்கள் எல்லாம் வெகு தூரம் பின்னாலேயே அந்தப் பெரிய ஜன சமுத்திரத்தினால் தடை செய்யப்பட்டு நின்று விட்டன. குதிரைகள் வந்து மாளிகை வாசலில் நின்றது, ஒரு பெரிய முழக்கம் எழுந்தது. இருபது பேரிகைகள், இருநூறு கொம்புகள், முந்நூறு தாரைகள், ஐந்நூறு தம்பட்டங்களிலிருந்து எழுந்த அந்தப் பெருமுழக்கத்தைக் கேட்டு அந்த மாபெரும் ஜன சமுத்திரத்தின் பேரிரைச்சலும் ஒருவாறு அடங்கியது. வாத்தியங்களின் பெருமுழக்கம் சிறிது நேரம் ஒலித்துவிட்டுச் சட்டென்று அடங்கி நின்றது.

அப்போது ஏற்பட்ட நிசப்தத்தில் கட்டியங் கூறுவோன் மேன் மாடத்தை அடுத்திருந்த ஒரு மேடை மீது நின்று இடி முழக்கக் குரலில் கூவினான்:

"சூரிய வம்சத்திலே பிறந்த மனுமாந்தாதா. அந்த வம்சத்திலே புறாவுக்காக உடலை அறுத்துக் கொடுத்த சிபிச் சக்கரவர்த்தி, சிபிச் சக்கரவர்த்திக்குப் பின் தோன்றிய இராஜகேசரி, அவருடைய புதல்வர் பரகேசரி, பசுவுக்கு நியாயம் வழங்குவதற்காகப் புதல்வனைப் பலி கொடுத்த மனு நீதிச் சோழன், இமயமலையில் புலி இலச்சினை பொறித்த கரிகால் பெருவளத்தான், நலங்கிள்ளி, நெடுங்கிள்ளி, பெருநற்கிள்ளி குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன், குராப்பள்ளி துஞ்சிய கிள்ளிவளவன், எழுபத்திரண்டு சிவாலயம் எடுப்பித்த கோப்பெருஞ் சோழர், இவர்கள் வழிவழித் தோன்றிய தொண்ணூறும் ஆறும் புண் சுமந்த பழையாறை விஜயாலயச் சோழர், அவருடைய குமாரர் ஸஸ்ய மலையிலிருந்து.தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

## மாசிலாபுரத்து கிணற்று நீர்



(நேற்றைய தொடர்ச்சி)

இல்லை இன்றைக் குத்தான் கிளம்புகின்றான், அதுக்குள்ளே தண்ணீர் எடுத்துவிட்டு போய் விடலாம் என்று வந்தேன்.

நமது ஊர் தண்ணீரை போத்தலில் பிடித்துக் கொடுத்து விடு, போய்ச் சேரும் வரைக்கும் குடிக்க தண்ணீர் வேணுமல்லவா? அங்குள்ள பெண்கள் யோசனை சொன்னார்கள். இதை கேட்டுக்கொண்டிருந்த கிணற்றுக்கு ஒரே சந்தோசமாகிவிட்டது. எப்படியும் போத்தலில் என்னை ஊற்றி கொடுப்பார்கள். நான் அவனுடன் வட இந்தியாவுக்கு செல்வேன், முடிந்தால் கடலையும் பார்க்க முடியும் என்று நினைத்து கொண்டது.

அந்த கிணற்றின் அதிஷ்டமோ என்னவோ முக்கால்வாசி குடித்து விட்டு மிச்ச தண்ணீருடன் பாட்டிலை கணபதியப்பன் பையன் தன் கைப்பையிலேயே வைத்துக் கொண்டான் ஒரு வாரத்திற்குள் அவனுக்கு லண்டனுக்கு செல்ல ஓடர் வந்து விட்டதால் லண்டனுக்கு கப்பல் ஏறி விட்டான், கப்பலில் அங்கு போய் சேர ஒரு மாதம் ஆகும்.

கப்பல் வேகமாக போய்க்கொண்டிருந்தது. மேல் மாடியில் ஒரு அறையில் இருந்து வெளியே வந்த வையாபுரி கப்பலின் மட்ட தளத்திற்கு வந்து நின்று கீழே குனிந்து கடலை பார்த்துக்கொண்டிருந்தான். கடல் பெரிய பெரிய அலைகளுடன் கொந்தளித்து கொண்டிருந்தது. அப்பொழுது அவனுக்கு தாகம் எடுத்தது. தண்ணீர் கையில் எடுத்து வராதது ஞாபகம் வரவே. மீண்டும் அவன் அறைக்கு ஓடி சென்றவன் தன் கைப்பையை திறந்து பார்க்க அந்த கிணற்றின் மிச்ச தண்ணீர் அப்படியே இருந்தது. ஆனால் ஊரில் இருந்து எடுத்து வந்து பதினைந்து நாட்களுக்கு மேல் ஆகி விட்டதே? சட்டென கப்பலின் மட்டத்துக்கு வந்து கப்பல் ஓரம் சென்று போத்தலில் இருந்த மீதித் தண்ணீரை முழுவதும் கடலுக்குள் கொட்டினான்.மீண்டும் புதிதாக தண்ணீர் எடுக்க உள்ளே சென்றான்.

கடலுக்குள் விழச் சென்று கொண்டிருந்த மாசிலாபுரம் கிணற்று நீர் கீழே கடலை பார்த்து தன்னை விட பெரியவன் என்று மனதுக்குள் ஒப்புக்கொண்டாலும், தான் விழுந்தவுடன் பெரிய அலைகள் உருவாகிக்கொண்டிருப்பதை பார்த்து என்னுடைய துளியூண்டு தண்ணிக்கே இந்த கடல் இப்படி பயந்து குதிக்குதே என்று நினைத்து கொண்டே உள்ளே சங்கமமாகி விட்டது.

குழந்தைகளே நாமும் கிணற்று தண்ணீரின் எண்ணத்துக்கு மதிப்பளித்து அந்த மீதித் தண்ணீர் விழுந்ததற்கு கடல் பயந்து குதிக்கிறது என்று ஏற்றுக் கொள்வோமா இல்லை என்றால் கிணற்று தண்ணீருக்கு வருத்தமாகி விடும்.

இருந்தாலும் கிணற்று நீர் கடலை அடையவேண்டும் என்று நினைத்து சாதித்து விட்டதற்கு நாம் பாராட்டத்தான் வேண்டும் இல்லையா குழந்தைகளே.

(முற்றும்.)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

பிறரை குற்றம் கூறும் குணத்தில் இருந்து விடுபட்டு இருந்தால், அனைவரின் ஆசீர்வாதங்களைப் பெறுவோம். – அறிஞர்

வலம்புரி
TP : 021 222 3378
website : www.valampurii.lk

## செம்மணி மனிதப் புதைகுழி விவகாரம் சட்டத்தரணிகள் களமிறங்க வேண்டும்

செம்மணியில் மண்ணைத் தோண்டத் தோண்ட மனித எலும்புக்கூடுகள் வெளிவந்த வண்ணமுள்ளன.

ஒவ்வொரு நாளும் செம்மணியில் அகழ்வுப் பணிகள் நடைபெறும்போது, இன்று எத்தனை மனித எலும்புக்கூடுகள் என்ற கேள்விக்குள் இருக்கக்கூடிய ஏக்கம், துயரம், தவிப்பு சாதாரணமானவையல்ல.

ஓ! கடவுளே இந்த மனித எலும்புக்கூடு என் பிள்ளையாக, என் உறவாக இருந்துவிடக் கூடாது என்ற அந்தப் பிரார்த்தனை தமிழ் மக்கள் அனுபவிக்கின்ற அவலத்தின் உச்சம் எனலாம்.

ஆம், காணாமல்போன உறவுகளைத் தேடுகின்ற எம் உறவுகள் கண்ணீரும் கம்பலையுமாக அலைந்து பல ஆண்டுகள் ஆகின்றன.

எனினும் அந்த மக்களின் அவலத்துக்கு முடிவு கட்டவேண்டும் என யாரும் நினைத்திலர்.

இந்நிலையில் செம்மணியில் நடக்கின்ற அகழ்வின்போது மனித எலும்புக்கூடுகள் வெளிப்பட்ட வண்ணமாக இருப்பது, எங்கள் உறவுகளின் மனநிலையை எந்தளவுக்குப் பாதிக்கச் செய்யும் என்பதை தமிழ் இனமாக நாம் உணர்ந்து கொள்ள வேண்டும்.

ஏனெனில் செம்மணியில் மீட்கப்படுகின்ற மனித எலும்புக்கூடுகள் எங்கள் உறவுகளினுடையது என்பதில் மாற்றுக் கருத்திருக்க முடியாது.

ஆக, தமிழின அழிப்பின் ஓர் அத்தியாயமே செம்மணி மனிதப் புதைகுழியாகும்.

ஆம், செம்மணியில் மீட்கப்படுகின்ற மனித எலும்புக்கூடுகள் உலகளவில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தவல்லன.

கூடவே எங்கள் ஈழத்தில் தமிழின அழிப்பைச் சிங்களப் பேரினவாதம் மேற்கொண்டதை ஆதாரப்படுத்தவல்லவை.

எனினும் அது தொடர்பில் எங்களின் கவனயீர்ப்புகளே உலகை விழிப்படையச் செய்யும்.

அதிலும் செம்மணி மனிதப் புதைகுழி விடயத்தில் எங்கள் தமிழ்ச் சட்டத்தரணிகள் – எங்கள் தமிழ்ச் சட்டத்தரணிகளை பிரதிநிதித்துவம் செய்யும் பிராந்திய சட்டத்தரணிகள் சங்கம் களத்தில் இறங்கி; செம்மணி மனிதப் புதைகுழி தொடர்பில் கவனயீர்ப்புப் போராட்டங்களை முன்னெடுக்க வேண்டும்.

உண்மையில் செம்மணி மனிதப் புதைகுழி தொடர்பில் கொதித்தெழ வேண்டியவர்கள் எங்கள் தமிழ்ச் சட்டத்தரணிகள்.

மனித எலும்புக்கூடுகள் தொடர்பில் சர்வதேச நிபுணத்துவ சேவை தேவை என்ற கோசத்துடன் இதுவிடயத்தில் சர்வதேச விசாரணை இடம்பெற வேண்டும் என எங்கள் சட்டத் தரணிகள் கூட்டாகக் கோரிக்கை விடும்போது அது காத்திரமான பலனைத் தரும்.

எனினும் செம்மணி வழக்கை முன்னெடுக்கின்ற ஒரு சில சட்டத்தரணிகளைத் தவிர, ஏனைய தமிழ்ச் சட்டத்தரணிகள் தமக்கும் அதற்கும் எந்தத் தொடர்பும் இல்லாததுபோல மௌனமாக இருப்பது வேதனைக்குரியது.

ஆகையால், ஒட்டுமொத்த தமிழ்ச் சட்டத்தரணிகளும் செம்மணியில் கூடி சர்வதேச விசாரணையை வலியுறுத்த வேண்டும்.

அவர்களோடு தமிழ் மக்களும் இணைய வேண்டும்.

இஃது தற்போதைய அரசுக்கு எதிரானதல்ல. மாறாக தமிழின அழிப்பைச் செய்த கொடியவர்களுக்கு – வஞ்சகர்களுக்கு எதிரானது. நீதிக்கானது என்பது நினைவுபடுத்தற்குரியது.

# அரசாங்கத்தின் கொள்கைக்கு மாறாக படையினர் காணிகளை அபகரிக்கின்றனர்

## பாராளுமன்றத்தில் செல்வம் எம்.பி குற்றச்சாட்டு

வடக்கு மற்றும் கிழக்கில் காணிகள் விடுவிக்கப்படும் என்று ஜனாதிபதி கூறினாலும் முப்படையினர் பல்வேறு வழிகளில் காணி அபகரிப்பு செயற்பாடுகளில் ஈடுபடுகிறார்கள். அரசாங்கம் ஒரு கொள்கையில் இருக்கையில் வடக்கு மற்றும் கிழக்கில் முப்படையினரும், பொலிஸாரும் பிறிதொரு கொள்கையில் செயற்படுகிறார்கள். மாறுப்பட்ட கொள்கைகளினால் அரசாங்கத்தின் மீதான மக்களின் நம்பிக்கை சிதைவடையும் என ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டணியின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் சுட்டிக்காட்டினார்.

பாராளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை (8) நடைபெற்ற இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டுச் சட்டத்தின் கீழ் பிரசுரிக்கப்பட்ட வர்த்தமானியின் ஒழுங்கு விதிகள் மீதான விவாதத்தின் போது இது குறித்து அவர் மேலும் உரையாற்றியதாவது.

எமது மக்களின் இருப்பை தக்கவைத்துக் கொள்வதற்காக நில அபகரிப்புக்கு எதிரான போராட்டத்தில் தொடர்ந்து ஈடுபட்டு வருகிறோம். வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் முப்படைகலும் பல்வேறு வழிகளில் நில அபகரிப்பில் ஈடுபடுகின்றன.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் பொது காணிகளில் உள்ள மரக் கிளையை தமிழர் ஒருவர் வெட்டினால் அவர் கைது செய்யப்பட்டு, அவர் சிறைக்குச் செல்ல நேரிடும் ஆனால் வடக்கில் மகாவலி வலயத்துக்குட்பட்ட 600 ஏக்கர் காணியை பெரும்பான்மை இனத்தை சேர்ந்த ஒருவர் சட்டவிரோதமான முறையில் வெற்றிடமாக்கியுள்ளார்.

அதேவேளை வவுனியா ஓமந்தை பொலிஸ் நிலையத்துக்கு முன்னாள் உள்ள தனியார் காணி ஒன்றை பொலிஸார் துப்பரவு செய்துள்ளனர். காணி அபகரிப்பு நிறுத்தப்படும். காணி விடுவிக்கப்படும் என்று ஜனாதிபதி குறிப்பிடுகிறார். ஆனால் பொலிஸார் மற்றும் முப்படையினர் காணி அபகரிப்பு நடவடிக்கைகளில் தொடர்ந்து ஈடுபடுகிறார்கள். (ந-7)

# இனப்படுகொலை இடம்பெற்றதற்கான வலுவான சாட்சியமே செம்மணி புதைகுழி!

(கொழும்பு)

ஈழத்தமிழர்கள் மீது பௌத்த மேலாதிக்கவாதிகளால் புரியப்பட்ட மிக மோசமான படுகொலைகளுக்கான பிரதான சாட்சியமாக முள்ளிவாய்க்காலைப் போன்று, செம்மணி சித்துப்பாத்தி மனிதப்புதைகுழியை அடையாளப் படுத்தப்பட முடியும் என பாராளுமன்ற உறுப்பினரும், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பாராளுமன்றக் குழுத் தலைவருமான சிவஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் கொழும்பிலுள்ள ஊடகம் ஒன்றுக்கு கருத்து தெரிவிக்கையில் அவர் மேலும் தெரிவித்ததாவது.

செம்மணி சித்துப்பாத்தி மயானப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வுகளில் நேற்று முன்தினம் வரை 52 மனித என்புத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. அகழ்ப்படும் பகுதிகளிலிருந்து மழைநீரை வெளியேற்றுவதற்காக அமைக்கப்பட்ட கால் வாய்களில் கூட மூன்று இடங்களில் என்புச் சிதிலங்கள் தென்பட்டுள்ளன என்றால் இனப்படுகொலைக்கான வலுவான சாட்சியமாக அந்த மனிதப் புதைகுழியை அடையாளப்படுத்த முடியும்.

ஆனால்எழுபது ஆண்டு காலமாக தமிழர்கள் மீது புரியப்பட்ட இனப்படுகொலைக்கான நீதி விசாரணையை சித்துப்பாத்தி மனிதப் புதைகுழியோடு நிறுத்திக்கொள்ள இந்த அரசாங்கமும் தன்னாலான பிரயத்தனங்களை முன்னெடுக்கக் கூடும் என்ற அடிப்படையில், இன அழிப்புக்கான பொறுப்புக் கூறலும் பரிகார நீதியும் பரந்துபட்ட அளவில் அணுகப்பட வேண்டும் என்பதில் நாமும், நீதியை நாடும் எல்லாத் தரப்புகளும் மிகுந்த அவதானம் செலுத்த வேண்டும்.

உலகின் மனச்சாட்சியை உலுக்கும் உணர்வு சார்ந்த படுகொலை அடையாளமான செம்மணி மனிதப் புதைகுழியோடு, மன்னார், கொக்குத்தொடுவாய், திருக்கேதீஸ்வரம், மண்டைதீவு உள்ளிட்ட மனிதப் புதைகுழிகள் தொடர்பிலும் முறையான நீதி விசாரணைகள் ஆரம்பிக்கப்பட வேண்டும்.

அதனடிப்படையில் 2009 ஆம் ஆண்டு போர் மௌனிக்கப்பட்ட போது, ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்டோர் காணாமலாக்கப்பட்டும், கொல்லப்பட்டும் உள்ளதாக அப்போதைய மன்னார் மறைமாவட்ட ஆயர் மறைந்த இராஜப்பு ஜோசப் வழங்கிய சாட்சியத்தின் அடிப்படையில் சர்வதேச விசாரணைகளுக்கான அடிப்படையாக செம்மணி மனிதப்புதைகுழி விவகாரம் அணுகப்பட வேண்டும் என அவர் தெரிவித்தார். (நி)

# 5 ஆயிரம் பொலிஸாரை ஆட்சேர்ப்பு செய்ய நடவடிக்கை

(கொழும்பு)

பொலிஸ் துறையில் நிலவும் வெற்றிடங்களை நிரப்ப 5,000 பொலிஸாரை உடனடியாக ஆட்சேர்ப்பு செய்யும் பணி விரைவில் தொடங்கும் என்று பொதுப் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்துள்ளார்.

பாராளுமன்ற அமர்வில் நேற்றுக் காலை கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இதன்போது மேலும் பேசிய அமைச்சர், இது தொடர்பான வர்த்தமானி அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளதாகவும், தற்போது விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டு வருவதாகவும் குறிப்பிட்டார்.

தற்போது பொலிஸ் துறையில் சுமார் 28 ஆயிரம் வெற்றிடங்கள் உள்ளன. இதனால் சுமார் 1,500 உயர்தர அதிகாரிகள் உட்பட 5 ஆயிரம் பொலிஸாருக்குப் பதவி உயர்வு வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளதாகவும் இதன் போது சுட்டிக்காட்டினார். (நி)

# ரம்புட்டான் சாப்பிட்ட சிறுவன் உயிரிழப்பு

## அதிர்ச்சியடைந்த தாயார் வைத்தியசாலையில்

(கொழும்பு)

மித்தெனிய பகுதியில், ரம்புட்டான் விதை தொண்டையில் சிக்கி ஐந்து வயது சிறுவன் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நேற்று முன்தினம் மதியம் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

மித்தெனிய - பல்லே பகுதியைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளைக் கொண்ட குடும்பத்தில் இளைய சிறுவனே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

வீட்டில் வாங்கி வைக்கப்பட்டிருந்த ரம்புட்டானை எடுத்து சாப்பிட்டுக் கொண்டிருந்த வேளை, ரம்புட்டான் விதை சிறுவனின் தொண்டையில் சிக்கியுள்ளது.

இதனையடுத்து வீட்டில் உள்ளவர்கள் உடனடியாக வலஸ் முல்ல வைத்தியசாலைக்கு சிறுவனை கொண்டு சென்றுள்ளனர்.

எனினும், சிறுவன் ஏற்கனவே உயிரிழந்துவிட்டதாக வைத்தியசாலையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிறுவனின் இழப்பையும் அதிர்ச்சியையும் தாங்க முடியாமல் திடீரென நோய் வாய்ப்பட்ட சிறுவனின் தாயார் வைத்தியசாலையில் சிகிச்சைப் பெற்று வருவதாகத்தெரிவிக்கப்படுகின்றது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மொசாட் 09

சொக்கன்

நம் ஊரில் சொந்த செலவில் சூனியம் வைத்துக்கொள்வது என்று சொல்வார்களே அதுவும் இதுவும் ஒன்றுதான்!

அஹ்மதைக் கொலை செய்த மொசாட் ஏஜென்ட்கள் டான் எர்ட் மரியானெ க்ளாட்னி காஃப் இவர்கள் துப்பாக்கியோடு காரிலிருந்து இறங்கியது அஹ்மதைச் சுட்டுக் கொன்றது எல்லாவற்றையும் நேரில் பார்த்த சாட்சிகள் இருந்தார்கள்.

அதுகூடப் பரவாயில்லை மொசாட் செய்த அடுத்த தவறு இந்தக் கொலைக்காகக் கார் வாடகைக்கு எடுக்கும்போது ஏஜென்ட்கள் அவர்களுடைய சொந்தப் பெயரைக் கொடுத்திருந்தார்கள்.

நோர்வே பொலிஸ் சும்மா இருக்குமா? சுறுசுறுப்பாகத் துப்புத்து லக்கி ஒரே நாளில் சம்பந்தப்பட்ட மொசாட் ஏஜென்ட்களை வளைத்துப் பிடித்து விட்டார்கள்.

கைதுசெய்யப்பட்ட இந்த மொசாட் ஏஜென்ட்களாவது வாயை மூடிக்கொண்டு சும்மா இருந்திருக்கலாம். பொலிஸ் சித்திரவதைக்குப் பயந்து இந்தக் கொலையின் நோக்கம் என்ன திட்டத்தில் சம்பந்தப்பட்ட மற்றவர்கள் யார், அவர்கள் இப்போது எங்கே இருக்கிறார்கள் என்று எல்லா விபரங்களையும் கொட்டி விட்டார்கள்.

போதாதா? நேராகக் கார் எடுத்துக் கொண்டு புறப்பட்டு போன நோர்வே பொலிஸ் அஹ்மத் பௌச்சிகி கொலையுடன் சம்பந்தப்பட்ட கும்பலை அப்படியே அள்ளிப் போட்டு ஜெயிலில் தள்ளிவிட்டார்கள்.

இப்போது மொசாடுக்கு வேறுவழியோ இல்லை. பொலிஸிடம் மாட்டியவர்கள் வாயைத் திறக்காமல் இருக்கவேண்டும் என்று பிரார்த்தனை செய்ய ஆரம்பித்தார்கள்.

பொதுவாக மொசாட் ஏஜென்ட்களுக்குப் பல விடயங்களில் கடுமையான பயிற்சி அளிக்கப்படுகிறது. அதில் முக்கியமானது மாட்டிக்கொண்டால் அடுத்தவர்களைக் காட்டிக் கொடுக்காமல் இருப்பது.



குறிப்பாக நான் ஒரு மொசாட் ஏஜென்ட் என்று யாரும் எப்போதும் ஒப்புதல் வாக்குமூலம் தரக்கூடாது. அதற்குப் பதிலாக வேறு என்ன பொய் வேண்டுமானாலும் சொல்லலாம். மொசாட் ஒரு விவகார த்தில் சம்பந்தப்பட்டிருக்கிறது என்பது மட்டும் யாருக்கும் எப்போ தும் தெரிந்துவிடக் கூடாது.

ஆனால் அஹ்மத் பௌச்சிகியைக் கொலை செய்த மொசாட் ஏஜென்ட்கள், இந்த ஒரு பாடத்தைமட்டும் சொய்ஸில் விட்டு விட்டார்களோ என்னவோ, பொலிஸ் லத்தியைத் தூக்கியவுடன் எல்லா விடயங்களையும் கக்கிவிட்டார்கள். அஹ்மதைக் கொலை செய்தது மொசாட்தான் என்கிற விபரம் வெளியே வந்து விட்டது.

உடனடியாக இந்த விவகாரம் சர்வதேசப் பிரச்சினையாக மாறியது. நோர்வேயில் வாழ்கிற ஒருவரை அந்த ஊர் மண்ணில் சுட்டுத் தள்ளுவதற்கு மொசாட்டுக்கு என்ன தைரியம்! என்று எல்லோரும் ஹைவால்யூமில் அலற ஆரம்பித்தார்கள்.

அதுமட்டுமில்லை. ம்யூனிக் படுகொலைக்குப் பழிவாங்குவதற்காக மொசாட் ஒரு ரகசிய வேட்டை நடத்திக் கொண்டிருக்கிற தகவலும் வெளியே கசிந்து விட்டது. இது அராஜகம் மனித உரிமை மீறல் என்று பத்திரிகைகள், சமூக இயக்கங்கள் கடுமையாகக் கண்டித்தன.

போதாக்குறைக்கு நோர்வே பொலிஸிடம் மாட்டிய மொசாட் ஏஜென்ட்கள் தொடர்ந்து பேசிக்கொண்டிருந்தார்கள். உள்ளூரில் அக்கம் பக்கத்து நாடுகளில் எங்கெல்லாம் மொசாட் உளவாளிகள் இருக்கிறார்கள், அவர்கள் என்ன மாதிரியான வேடங்களில் ஒளிந்து வாழ்கிறார்கள், அங்கே என்னென்ன திட்டங்களை நிறைவேற்றிக் கொண்டிருக்கிறார்கள் என்று ஒரு தகவல் பாக்கியில்லாமல் புட்டுப் புட்டு வைத்து விட்டார்கள்.

பதறிப்போன மொசாட் ஐரோப்பாவில் வாழும் தனது ஏஜென்ட்கள் பலரை இரகசியமாகத் திரும்ப அழைத்துக் கொண்டது. இன்னும் சிலரை அங்கேயே ஒளிந்து வாழச் சொன்னார்கள்

ஆனால் இதற்குள் உலக அளவில் மொசாட்டின் இமேஜ் கெட்டுப் போய் விட்டது. அது என்ன உளவுத்துறையா? இல்லை அடியாள் படையா? என்று ஆளாளுக்குக் கேள்வி கேட்க ஆரம்பித்தார்கள்.

இஸ்ரேல் அரசாங்கத்துக்கு எல்லாப் பக்கங்களிலும் டென்ஷன். ஒழுங்காக மொசாட்டை அடக்கி வைக்கிறீர்களா? இல்லை நாங்கள் உங்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமா? நீங்களே யோசித்துக் கொள்ளுங்கள்!

அவர்களுக்குத் தெரியாத விடயம் இஸ்ரேலின் அரசாங்கத்துக்கு இணையான (அல்லது அதைவிட ஒருபடி மேலான) சக்தி மொசாட். யாரும் அவர்களை அடக்கி வைப்பதெல்லாம் சாத்தியமே இல்லை, அவர்களாக வாலைச் சுருட்டிக்கொண்டால் தான் உண்டு. வில்லி ஹாமர் விவகாரத்துக்குப்பிறகு மொசாட் கொஞ்சம் அடங்கிப் போக முடிவெடுத்தது. இப்போது சூழ்நிலை சரி யில்லை பதுங்கிக் கொள்வதுதான் புத்திசாலித்தனம்!

உடனடியாக ம்யூனிக் பழிவாங்கல் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த மொசாட் உளவாளிகள் எல்லோருக்கும் தகவல் பறந்தது கைவசம் எந்தத் திட்டம் இருந்தாலும் அதைப் பெட்டியில் போட்டுப் பூட்டிவிடுங்கள் இப்போதைக்கு எதுவும் செய்ய வேண்டாம் அமைதியாக வீட்டில் உட்கார்ந்து ரெஸ்ட் எடுங்கள்.

அப்படியானால் அபுஹாசன்?

இத்தனை பேரைக் கொன்றுவிட்டுக் கடைசியில் பெரிய திமிங்கிலத்தை நழுவவிடப் போகிறதா மொசாட்?

ம்ஹீம் சான்ஸே இல்லை மொசாட் பதுகங்குகிறது என்றாலே பின்னால் பாயப்போகிறார்கள் என்றுதான் அர்த்தம்!

மொசாட் மேலிடம் அபுஹாசனை மறந்துவிடவில்லை. அவர் எங்கே இருக்கிறார் என்ன செய்து கொண்டிருக்கிறார் என்பதைத் தொடர்ந்து கண் காணித்துக்கொண்டுதான் இருந்தார்கள் ஆனால் இந்தமுறை ரொம்ப இரகசியமாக ரொம்பக் கவனமாக அவர்கள் எதிர் பார்த்தபடி அபுஹாசன் ஒரு தப்புச் செய்தார். வில்லி ஹாமர் விவகாரத்தில் மொசாட்டின் மூக்கு உடைந்துவிட்டது இனிமேல் அவர்களால் வாலாட்டமுடியாது என்று நினைத்துக் கொண்டு தன்னுடைய தலைமறைவு வாழ்க்கையிலிருந்து வெளியே வந்தார். பாதுகாப்பு நடவடிக்கைகளையெல்லாம் ஓரங் கட்டி விட்டு பகிரங்கமாக உலாவ ஆரம்பித்தார். (தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நீதிமன்ற...

டிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு மேலும் கருத்துரைத்த அவர்,

செம்மணி அகழ்வைத் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்ல அரசாங்கம் முழுமையான ஆதரவை நல்கும். குறிப்பாக நீதிமன்றத்தின் செயற்பாடுகளுக்கு முழுமையான ஒத்துழைப்பை வழங்க நாம் தயாராக உள்ளோம் என்றார். (ந-7)

## ஓமந்தையில்...

பிரதேச சபைத் தவிசாளரின் உத்தரவு, பொதுமக்களின் எதிர்பார்ப்பு என்பவற்றையும் மீறி ஓமந்தைப் பொலிஸார் குறித்த காணியை கையகப்படுத்தியமை மற்றும் விகாரை அமைக்க முயல்கின்றமை தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், மருத்துவர் இராமநாதன் அர்ச்சுனா ஆகியோர் நேற்று பாராளுமன்றில் சுட்டிக் காட்டினர்.

இதையடுத்துப் பதிலளித்த சபை முதல்வரும் அமைச்சருமான பிமல் ரத்நாயக்க, இந்த விடயம் தொடர்பில் எமது மாவட்ட எம்.பியும் எமக்கு அறிவித்தார். நாம் உடனடியாக அந்த வேலையை நிறுத்தியுள்ளோம் என்றார்.

இதனையடுத்து எழுந்த பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேசேகர, வவுனியா ஓமந்தை பொலிஸ் நிலையம் அருகில் உள்ள காணியை பொலிஸார் துப்புரவு செய்யும் வேலை உடனடியாக நிறுத்தப்பட்டுள்ளது. பொலிஸ்மா அதிபருடன் நான் பேசிஅதற்கான உத்தரவை வழங்கியுள்ளேன். அந்த வேலை இனி இடம்பெறாது என்றார். (ந-7)

## செம்மணிப் புதை...

செம்மணிப் புதைகுழி தொடர்பான தகவல்களைச் சேகரித்து எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸாவிற்கு தொடர்ந்து வழங்கி வருகிறோம். இது தொடர்பில் மிக விரைவில் எமது கட்சித் தலைவர் பாராளுமன்றத்தில் காத்திரமான விடயங்களை எடுத்துக் கூறுவார்.

அதேவேளை செம்மணி மனிதப் புதைகுழி விவகாரம் தமிழ் மக்களின் உணர்வுகளுடன் ஒன்றிணைந்த ஒரு விடயம். இவ்விடயத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்குத் தீர்வு வேண்டும் என்பதே எமது நிலைப்பாடு. அதற்குச் சர்வதேச விசாரணைகள் அவசியம்.

செம்மணி விவகாரத்தில் நான் கூறும் அல்லது வெளிப்படுத்தும் கருத்தை எனது தலைமை ஏற்கும் என்ற நம்பிக்கை எனக்குள்ளது. எனது கருத்தை நிராகரிக்கும் நிலை உருவானால் கட்சியை விட்டு வெளியேறவும் தயங்கமாட்டேன் எனத் தெரிவித்தார். (ந-7)

## 600 தமிழர்...

சுகாஸ் தெரிவித்துள்ளார்.

நேற்று செம்மணிக்குச் சென்று பார்வையிட்ட பின் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஏற்கெனவே படுகொலை செய்யப்பட்ட கிருசாந்தி குமாரசாமி பாலியல் படுகொலை வழக்கில் சாட்சியாக இருந்த முன்னாள் இராணுவச் சிப்பாய் சோமரட்ண ராஜபக்ஷ சொல்லியதைப் போல 600க்கும் மேற்பட்ட தமிழர்கள் இங்கே புதைக்கப்பட்டதை நாங்கள் உறுதியாக நம்புகின்றோம். அந்த எண்ணிக்கை மேலும் கூடலாமே தவிர குறைவதற்கு வாய்ப்புகள் இல்லை.

இவற்றுக்கு நீதியைப் பெறுவதற்கு நாங்கள் போராடுவதில் உறுதியாக இருக்கின்றோம். இந்த இடத்தில் நாங்கள் எமது மக்களிடம் முன்வைக்கின்ற கோரிக்கை என்னவென்றால் நீங்கள் அனைவரும் இந்த இனப் படுகொலைக்கு எதிராகக் குரல் கொடுக்க வேண்டும்.

தாயக உறவுகள் மாத்திரம் அல்லது புலம்பெயர் தேசங்களில் வசிக்கின்ற உறவுகளும் போராட்டங்களை முன்னெடுப்பதன் மூலம்தான் செம்மணி புதைகுழிக்கான நீதியை பெற்றுக் கொள்ள முடியும்.

செம்மணி என்பது வெறும் செம்மணி கிடையாது. தமிழ் மக்களுக்கு எதிராக சிங்கள, பௌத்த பேரினவாதத்தால் மேற்கொள்ளப்பட்ட ஒட்டு மொத்த அரச பயங்கரவாதத்தின் ஒரு பகுதியாகத்தான் நாங்கள் இதனைப் பார்க்கின்றோம். இது ஒரு குறியீடு. இத்தகைய குறியீடுகள் தமிழர் தாயகம் எங்கும் புதைக்கப்பட்டு காணப்படுகின்றது என்றார். (ந-7,104)

## மரத்திலிருந்து...

குமாரசாமிபுரத்தைச் சேர்ந்த துரைராசா (வயது-51) என்ற நான்கு பிள்ளைகளின் தந்தையான பிரஸ்தாப நபர் தேன் எடுப்பதற்காக மரத்தில் ஏறியபோது தவறிவிழுந்துள்ளார்.

மரத்தால் விழுந்தவரை உறவினர்கள் தருமபுரம் வைத்தியாலைக்கு கொண்டு சென்ற நிலையில் அவர் ஏற்கெனவே உயிரிழந்துவிட்டதாக வைத்தியர்கள் தெரிவித்தனர்.

சடலம் பிரேத பரிசோதனைக்காக கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (ந-7,316)

## தையி...

தில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி அழைப்பு விடுத்துள்ளது.

இது தொடர்பில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி வெளியிட்டுள்ள அறிக்கையில்,

இந்தப்போராட்டம் கடந்த இரண்டு ஆண்டுகளுக்கும்மேலாக தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வரும்நிலையில் இன்று (ஜூலை 9 - புதன் கிழமை) மாலை 4.30 மணி முதல் 6.30 மணி வரை மற்றும் நாளை (ஜூலை 10 - வியாழக்கிழமை) பௌர்ணமி தினத்தன்று காலை 6.30 மணி முதல் மாலை 6.00 மணி வரை கவனயீர்ப்புப் போராட்டமாக நடைபெறவுள்ளது என்றுள்ளது. (ந-7)

## கிருபா...

செம்மணியை நோட்டமிட்ட மரம வாகனம் எனது வீட்டுக்கு அருகாமையிலும் வந்திருந்தது.என்னை அச்சுறுத்துவதே அதன் நோக்கமாகும்.

எனினும் எம் மக்களுக்கான - நீதியைப் பெற்றுக் கொள்வதில் நான் உறுதியாக உள்ளேன் என்றார். (ந-7,104)

## ரிக்ரொக்கில்...

மேற்பட்ட பிடியாணை உத்தரவுகள் உள்ளதனைச் சுட்டிக்காட்டி பொலிஸார் முன்வைத்த விண்ணப்பத்தை கவனத்தில் எடுத்த நீதவான் மன்று அவருக்கு வழங்கப்பட்ட பிணைகளை நிராகரித்தும் கட்டளையிட்டது.

அண்மையில் சமூக வலைத்தளங்களில் பிரபலமாவதற்காக பல்வேறு சர்ச்சையான காணொலிகளை வெளியிட்டு வந்த வவுனியா - ஓமந்தையைச் சேர்ந்த 23 வயதுடைய நபரே இவ்வாறு மடு பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு நேற்று மன்னார் நீதவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டபோதே இவ்வாறு உத்தரவிடப்பட்டது. (ந-7)


வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127

மஹஜன சம்பத
திகதி 2025.07.08
சீட்டிழுப்பு இலக்கம் 5884
D 1 6 2 4 3 0
அத சம்பத
D 2 4 3 0
சீட்டிழுப்பு இலக்கம் 0459
National Lotteries Board

தன நிதானய
திகதி - 2025.07.08
சீட்டிழுப்பு இலக்கம் - 1914
J 16 24 31 38 J
83087

மெகா பவர்
திகதி 08/07/2025
சீட்டிழுப்பு இலக்கம் 2232
N 03 15 21 34 73

ஜய
திகதி 2025.07.08
சீட்டிழுப்பு இலக்கம் 0152
R 2 8 3 1

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 4126
சீட்டிழுப்பு திகதி 08.07.2025
W 15 40 59 72
W

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2025.07.08
சீட்டிழுப்பு இலக்கம் 1193
விருச்சிகம் 33 40 42 62 விருச்சிகம்
54561 28

உத்தியோகபூர்வ முடிவுகள்
08.07.2025 வெற்றி வாரம் 592
J 5 0 2 7 8 0
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.20,000,000.00
DLB

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2858
சீட்டிழுப்பு திகதி 2025.07.08 தினம் செவ்வாய்க்கிழமை
06 48 70 79 S
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.73,862,254.40

சனிதா
திகதி 08.07.2025 வெற்றி வாரம் 5019
01 17 40 51 T
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 71,041,264.00
ரூ. 50,000/- பணப்பரிசு

சசிரி
வெற்றி வாரம் 721
சீட்டிழுப்பு திகதி 08.07.2025
செவ்வாய்க்கிழமை
05 31 32
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. ரூ.2,000,000.00

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4570
சீட்டிழுப்பு திகதி 08.07.2025 தினம் செவ்வாய்க்கிழமை
02 03 36 48 விருச்சிகம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.4,363,634.40

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
P 17 08 37 44 67
2034
08.07.2025
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.581,523,644.20
6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அத கோடிபதி ADA KOTIPATHI
செவ்வாய்க்கிழமை
வெற்றி வாரம்: 2684
சீட்டிழுப்பு திகதி: 2025.07.08
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.70,181,388.80
12 13 20 35 Q
ரூ.100,000/-


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சவால்களை வென்றிடும் பாதையில்,

# பளை

வளம் பொருந்திய நகரத்தை
பலமாக்கிடுவோம்.



கற்பகத் தருவான பனைமர வளத்தினைக் கொண்ட பளை பிரதேசத்தில் LOLC பினான்ஸ் நிறுவனத்தின் புதிய கிளையொன்று திறந்துவைக்கப்படுகின்றது.

**பளை பிரதேசவாசிகளின் நிதியியல் செயற்பாடுகளை ஒரே இடத்தில் வழங்கிடும்.**

(C-201)

பரிந்துரைகள் மற்றும் முறைப்பாடுகளுக்கு

www.lolcfinance.com
facebook.com/LOLCFinanceplc
instagram.com/lolc.finance
x.com/LOLCFinance
youtube.com/@lolcfinance

2001 டிசம்பர் 13 ஆம் திகதி ஸ்தாபிக்கப்பட்ட LOLC பினான்ஸ் PLC, 2011 இல 42 எனும் நிதித்தொழில் சட்டத்தின் கீழ் இலங்கை மத்திய வங்கியின் அங்கீகாரம் பெற்ற Lanka Rating நிறுவனத்தின் A (Positive) தரப்படுத்தலைப் பெற்றுள்ளது. இலங்கை வைப்புகள் காப்புறுதித் திட்டத்தின் கீழ் தகைமை பெற்ற வைப்புகளுக்கு காப்புறுதி செய்யப்பட்டுள்ளதால் ஒரு வைப்பாளருக்கு 1,100,000 வரை உயர் நட்டஈட்டைப் பெற்றுக் கொள்ள முடியும்.

LOLC பினான்ஸ்



வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

## ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மாணிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (C-3370) 076 825 7716 (ஆகாஸ்)



## நம்பினால் நம்புங்கள்

அதிசயம் ஆனால் உண்மை உங்கள் எதிர்கால வாழ்க்கை துல்லியமாக (காண்டம்) கணித்துத் தரப்படும். ஜனன ஜாதகம் எழுதித் தரப்படும்.

**காயத்திரி திருமண சேவை**
கன்னாதிட்டி சிவன் கோயில் முன்பாக ரூபி விலாஸ் (4748)

உணவகம் ஒன்றிற்கு சமையல் ஆள் தேவை.

077 844 9861



வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378
076 097 3127


## மரண அறிவித்தல்

### திருமதி திலகவதி செல்வகுலசிங்கம் (திலகம் ரீச்சர்)
### (ஓய்வுபெற்ற ஆசிரியை)



மண்ணில் 10.07.1940 விண்ணில் 06.07.2025

யாழ். கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி திலகவதி செல்வகுலசிங்கம் அவர்கள் 06.07.2025 ஞாயிற்றுக்கிழமை அன்று இறைபதம் அடைந் தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிற்றம்பலம் - பத்தினிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான வீரகத்தி - பார்பதி தம்பதிகளின் மருமகளும் காலஞ்சென்ற திரு. வீரகத்தி செல்வகுலசிங்கம் அவர்களின் பாசமிகு மனைவியும் சுகன்யா, சுனித்தா(லவா), திருநீபன், ஷிரோமி ஆகியோரின் அன்புத் தாயாரும் மதிவண்ணன், நிரஞ்சன், துஷ்யந்தி, அபிராம் ஆகியோரின் பாசமிகு மாமியாரும் சஞ்ஜெயன், கிருத்திக், றிஷானி, அதிகன், ஆரன், உத்தரன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் காலஞ்சென்றவர்களான சிவஞானசுந்தரம், சுந்தரேஸ்வரி, சிவலோகசுந்தரி, யோகேஸ்வரி, அரசரட்னம், புஸ்பாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற பிறைசூடி, இரட்ணசிங்கம், அருந்தவநாயகி, காலஞ்சென்ற சகுந்தலா தேவி, இந்திராதேவி ஆகியோரின் அருமை மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை இன்று 09.07.2025 புதன்கிழமை அன்று அவரது இல்லத்தில் நடைபெற்று, பின்னர் மு.ப 10:00 மணியளவில் கரவெட்டி சோனப்பு இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

சாமியன் அரசடி,
கொடிகாமம் வீதி, நெல்லியடி. (3606)

தகவல்:
குடும்பத்தினர்


## உடனடி வேலை வாய்ப்பு
### நிர்வாக உத்தியோகத்தர்



விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்
V2 TRAVELS

எமது கிளைகள்
•கிளிநொச்சி •சுன்னாகம்
•சாவகச்சேரி •மானிப்பாய்
•நெல்லியடி •பருத்தித்துறை
•திருகோணமலை •வல்வெட்டித்துறை
•கோப்பாய் •புத்தூர்
•பண்டத்தரிப்பு •சங்கானை
•கொழும்பு

வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
சம்பளம் - 30'000/-
பயிற்சியின்போது - 25'000/-
0777-068-777
v2vacancies@gmail.com
(C-3371)



## கனடா - வரி இல்லாமல்
### விரைவு பொதிகள் சேவை

5-9 Kg 3960/-
11-16 Kg 2790/-
21-27 Kg 2680/-

குறைந்த விலை -நிறைந்த சேவை
கருவாடு, மருந்து வகைகள், எண்ணெய் வகைகள் அனுப்பலாம்
14 நாட்களில் Delivery


UK 11Kg - 1400/- France 11Kg - 2200/- Germany 11Kg - 2000/-
Swiss 11Kg - 2470/- Australia 11Kg - 1980/- Italy 11Kg - 2260/-

எமது நேரடி கிளைகள்
கொழும்பு, மட்டக்களப்பு, திருகோணமலை, கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, கொடிகாமம், புத்தூர், சாவகச்சேரி, கோப்பாய், சுன்னாகம், யாழ்ப்பாணம், சங்கானை, பண்டத்தரிப்பு, மானிப்பாய், நெல்லியடி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை

V2 TRAVELS 076 822 6241 076 822 6237 (C-3371)


## 1 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

### அமரர் அருளானந்தம் யோகேஸ்வரி



உலகமறியாத என்னை
முகமறியாமல் அக்கா என்றாய்!
வாய்ப்புகள் தவறிய போது
சாயவிடாமல் தாங்கி நின்றாய்
வேலி போல் என்னையும் நீ காத்தாய்!
மலரும் பூவென உனை நினைத்தேன்
காலன் உனை ஏன் கவர்ந்தான்.....!

பழமுதிர்ச்சோலை,
காரைநகர். (C-3360)

பிரிவால் துயருறும்
அக்கா, தர்மகுலசிங்கம் தனலட்சுமி
144/1, பிறவுன் வீதி, யாழ்ப்பாணம்.

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தினரால் ... அவர்களது அச்சகத்தில் 09.07.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org